விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 17 சனிக்கிழமை (01.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072

# இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள்!

## அமெரிக்காவின் அறிக்கை வெளியானது

இலங்கையில் தொடர்ந்தும் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசாங்கப் படையினரும் துணை இராணுவக்குழுக்களும் சட்டவிரோத படுகொலைகளை மேற்கொள்கின்றனர். குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் இவ்வாறான சட்டவிரோத கொலைகள் இடம்பெறுகின்றன என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டடுள்ளதாவது. இராணுவத்தினரும் பொலிஸாரும் சட்டவிரோதமான முறையில் நபர்களை கைது செய்து சித்திரவதை செய்கின்றனர்.

சட்டவிரோத கைதுகள் மற்றும் சிறைச்சாலைகளில் வசதியின்மை போன்ற பிரச்சினைகள் நிலவி வருகின்றன.

இடம்

19 ஆம் பக்கம் பார்க்க..

## டிப்பர் - மோ. சைக்கிள் விபத்து வயோதிபர் சம்பவ இடத்தில் பலி

### இருபாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக வந்த டிப்பர் மோதித்தள்ளியதில் மோட்டர் சைக்கிளில் பயணித்த வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல்சி[illegible] பலியானதோடு குடும்ப[illegible] ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். இருபாலைச் சந்திப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கோண்டாவிலிருந்து இருபாலை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை வேகமாக

20 ஆம் பக்கம் பார்க்க..

## சர்வதேச விசாரணைகளுக்கு சட்டத்தரணிகள் கோரிக்கை

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமை நிறுவகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் இணைத் தலைவர் பார்நோயிஸ் ஹெலனா கென்னடி தெரிவித்துள்

19 ஆம் பக்கம் பார்க்க..

## விவசாயி வெட்டிய நிலத்தில் 9 மனித எச்சங்கள் மீட்பு

### முல்லைத்தீவில் சம்பவம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார்கட்டு 200 வீட்டுத்திட்டப் பகுதியிலுள்ள காணியிலிருந்து 9 பேருடைய மனித எச்சங்களும் அந்த எச்சங்களைச் சுற்றியுள்ள நிலையில் 9 பாய்களும் ஒருவரின் அடையாள அட்டையும் மீட்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் விவசாயி ஒருவர் விவசாயம் செய்வதற்காக நிலத்தினைப் பண்படுத்திய போது நிலத்தினுள் மண்டையோடு இருப்பதை அவதானித்துள்ளதுடன் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தொடர்ந்து சம்பவ இடத்திற் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் தங்கராஜா பரஞ்சோதி, யாழ். மாவட்ட சட்ட மருந்துவ அதிகாரி சின்னையா சிவரூபன் ஆகியோர் முன்னிலையில் குறித்த நிலம் தோண்டப்பட்டது.

இதன் போது 9

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆதரவு திரட்டும் தமிழீழ அரசு

(கொழும்பு)

தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக, புலம்பெயர் தேசங்களில் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சமூக -அரசியற் பிரதிநிதிகளின் தோழமையினைத் திரட்டும் முன்னெடுப்பில் நாடு

20 ஆம் பக்கம் பார்க்க..

## கோபிதாஸின் மரணத்திற்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்

### நாளை புலோலியில்

(கொழும்பு)

சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிர்நீத்த கோபிதாஸின் மரணத்திற்கு நீதி கேட்டு சர்வதேச விசாரணை கோரும் ஜனநாயக ரீதியான போராட்டம் ஒன்று நாளை புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் இடம் பெறவுள்ளது.

இதற்கான அழைப்பை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

விஸ்வலிங்கம் கோபிதாஸ் 2007-ம் ஆண்டு கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கடுமையான உடல் உள சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். தற்போது மகசீன் சிறையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தபோது கடந்த

19 ஆம் பக்கம் பார்க்க..



இலங்கை விமானப்படையின் 14ஆவது தளபதியாக ஏயார் மார்ஷல் கோலித குணதிலக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

விமானப்படை தளபதியாக கடமை புரிந்த ஏயார் மார்ஷல் ஹர்ச அபேவிக்ரம ஓய்வு பெற்றதை அடுத்து அப்பதவிக்கு கோலித குணதிலக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மிகப் பிந்திய அதிரடி
எண்ணி 60 நாட்களில் கனடா பறக்கலாம்
கனடாவில் படிக்க, மாதம் 3 லட்சம் வரை உழைக்க 3 பேருக்கு மட்டும் 3 வருட விசா வெல்ல பொன்னான வாய்ப்பு
(யாவும் நிபந்தனைகளுடன்)
7 நாட்களும் திறந்திருப்போம்...
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com
(C-6624)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவிக்கு பேயோட்டிய ஆசிரிய ஆலோசகர்!

(திருகோணமலை)

பேய் விரட்டுவதாகக் கூறி 17 வயது மாணவியொருவரின் கால்களில் எரிகாயங்களை ஏற்படுத்திய ஆசிரிய ஆலோசகர் ஒருவர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஹொரவப்பொத்தானை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ரஞ்சனி குமாரி என்ற மாணவி, கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பேயோட்டியாகத் தோன்றிய ஆசிரியர் ஆலோசகர் மேற்படி சம்பவத்தை அடுத்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

இவ்விருவரின் அறிவுறுத்தலுக்கமையவே மாணவி, கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-8)

## 2இலட்சம் பெறுமதியான ஹெரோயின் சிறையில் விற்பனை?

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தினமும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி போதைப் பொருள் வர்த்தகத்தை முக்கிய போதைப் பொருள் வியாபாரிகள் மேற்கொண்டு வருவதுடன் அவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் சில சிறையதிகாரிகள் வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

இதற்காக அந்த அதிகாரிகளுக்கு மாதாந்தம் தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

அதிகளவான போதைப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் போதைப் பொருளை பயன்படுத்தும் நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரே சிறைச்சாலையாக கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை மாறியுள்ளதாக ஏனைய அதிகாரிகள் கூறுகின்றனர். (எ-8)

## ஹட்டன் விபத்து 36 பேர் காயம்

(கண்டி)

ஹட்டன்-டிக்கோயா அம்மன் கோயிலுக்கு முன்னால் நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் 36 பேர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டனில் இருந்து டயகம நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியும் ஒல்டன் சாமிமலையில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டியும் டிக்கோயா அம்மன் கோயிலுக்கு முன்னால் நேருக்கு நேர் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

காயமடைந்த 36 பேரில் 22 ஆண்களும் 14 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் சிறு குழந்தை ஒன்றும் உள்ளடங்குவதாக டிக்கோயா ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-8)

வயற் காணி தேவை

இரணைமடுக்குளத்து தண்ணீர் பம்பு உள்ள இருபோகமும் செய்கைக்குரிய வயற்காணி கிளிநொச்சிப் பகுதியை அண்மித்துத் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

0776341216.

## தேனிலவுக்கு இலங்கை மிகச் சிறந்த நாடு

### பட்டியலிட்டது சுவிஸ் நிறுவனம்

வெளிநாட்டவர்கள் தங்களது தேனிலவைக் கொண்டாடுவதற்காகச் செல்லச் சிறந்த நாடுகள் பட்டியலிலும் திருமணம் செய்து கொள்வதற்கான சிறந்த நாடுகள் பட்டியலிலும் இலங்கை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச சுற்றுலாத்துறை நிறுவனமான சுவிட்ஸர்லாந்தின் குஓனி நிறுவனம் கடந்த 8 வருடங்களாக நடத்திய ஆய்வின் பயனாகவே இலங்கைக்கு இந்த இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

திருமண வைபவங்கள் நடத்துதல் மற்றும் தேனிலவுக்கான ஹோட்டல்களைப் பதிவு செய்தல் போன்ற விடயங்களைக் கருத்திற் கொண்டே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது என்று மேற்படி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம், திருமணம் செய்து கொள்ள சிறந்த 10 நாடுகளாக மொரீஷியஸ், இலங்கை, அமெரிக்கா, சென்.லூசியா, அன்டிகுவா, தாய்லாந்து, பாபடோஸ், மெக்ஸிகோ, ஜமைக்கா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியன தெரிவாகியுள்ளன.

தேனிலவு செல்வதற்கு சிறந்த நாடுகள் பட்டியலில் மாலைதீவுகள், இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, மொரீஷியஸ், அமெரிக்கா, இந்தோனேஷியா, மலேசியா, சென்.லூசியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## சட்டக்கல்லூரி மாணவர்கள் அலரி மாளிகை நோக்கிப் பயணம்

(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரிக்கு சேர்த்து கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறி, இராவணா சக்தி அமைப்பும் சட்டக் கல்லூரிக்கு நுழைவு தேர்வு எழுதிய மாணவர்களும் இணைந்து நேற்று முற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கொள்ளுப்பிட்டி - லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

ஆர்ப்பாட்டம் காரணமாக கொள்ளுப்பிட்டி வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

பித்தளை சந்தியில் இருந்து பேரணியாக வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகையின் பின்புற நுழைவாயிலுக்கு அருகில் சென்றடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இராவணா சக்தி மற்றும் மாணவர் அமைப்பு ஆகியவற்றின் 5 பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை கையளிக்கும் நோக்கில் அலரிமாளிகைக்குள் சென்றனர்.

அலரி மாளிகையில் இருந்து வெளியில் வந்த பிரதிநிதிகள், ஜனாதிபதியின் செயலாளர் ஒருவருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரை தீயிட்டு கொளுத்தியதாக தெரியவந்தது. (எ-8)

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தை கூட்ட சம்பந்தனுக்கு ரெலோ கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விவாதித்து, தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதி உயர் பீடமான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை மிக விரைவாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அடைக்கலநாதன், தமிழீழ விடுதலை இயக்கச் செயலாளர் நாயகம் கென்றி மகேந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்ற முறையிலும் தமிழத் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அதி உயர்பீடமான ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை மிக விரைவாக கூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த வட மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஒரே ஒருமுறை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் பின்னர் இதுவரையில் கடந்த நான்கு மாதங்களாக கூட்டப்படாத சூழ்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக எமது மக்கள் மத்தியில் பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங்கள் மேல் எழத் தொடங்கியுள்ளன என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம் என்றுள்ளது. (எ-8)

## 60 ஆயிரம் வீடுகள் அமைக்க 300 மில்.அமெ.டொலர் தேவை

### செஞ்சிலுவைச் சங்க தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் 60 ஆயிரம் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 300 மில்லியன் அமெரிக்க டொலரிலும் கூடுதலான நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதே வேளை இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கென புதிதாக நிதியென எதுவும் வருவதில்லை என இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் ஜகத் அபேசிங்க தெரிவித்தார்.

யுத்தம் முடிந்த கையோடு நாம் வீடமைப்புக்களுக்கு நிதியை மும முரமாக கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். காலம் கடந்துவிட்டதாலும் இதை விட முக்கிய பிரச்சினைகள் உலகின் பல பகுதிகளிலும் ஏற்பட்டமையினாலும நிதிவளம் அற்றுப்போக காரணமாகின என்றும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஒருலட்சத்து 38 ஆயிரத்து 651 குடும்பங்களில 32 சதவீதமானோர் மட்டும் தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்தனர். 6 சதவீனமானோர் உறவினர் நண்பர்களுடன் வாழ்ந்தனர் என கடந்த 2013 ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் நடத்திய ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்த பின்னர் ஒருலட்சத்து 46 ஆயிரம் வீடுகள் தேவைப்பட்டிருந்தன ஆனால் 41 ஆயிரம் வீடுகள் மாத்திரம் மீளக்குடியமர்ந்தோருக்கு வழங்கப்பட்டன. 10 ஆயிரத்து 500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என ஐ. நா அதிகாரி ஹரிட்டார் கூறியுள்ளார் எனவும் 83 ஆயிரம் நிரந்தர வீடுகளுக்கு அரசாங்கமும் நன்கொடையாளர்களும் நிதி அளித்துள்ளனர். ஆயினும் இன்னும் 63 ஆயிரம் வீடுகளுக்கு நிதி தேவையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

## அதிபரின் வீட்டில் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றில் பணிபுரியும் அதிபரின் அலுவலகம் மற்றும் பாடசாலை வளாகத்திலுள்ள அவரது வீட்டின் மீது இனம்தெரியாத நபர்களால் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் இருவர் ஒழுக்கமின்மை காரணமாக கடந்த வாரம் இடைநிறுத்தப்பட்டனர். இம் மாணவர்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக பாதிக்கப்பட்ட அதிபர் தனது முறைப்பாட்டில் தெரிவித்ததாக பொலிஸார் கூறினர்.

இக் கல்வீச்சுத் தாக்குதலில் அலுவலகத்தின் 6 ஜன்னல் கண்ணாடிகளும் வீட்டின் 5 ஜன்னல் கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளாகவும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-8)

## அனந்திக்கு பாதுகாப்பு எதுவும் கூற முடியாதாம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், பாதுகாப்பு வழங்குமாறு வட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறித்து வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபரே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு நான் பதில் கூற முடியாது என்று யாழ். உதவி[illegible]லிஸ் அத்தியட்சகர் எ.நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். (எ-8)

காணி விற்பனைக்கு

புலோலி கிழக்கு பல்லப்பை பருத்தித்துறையில் 10 பரப் பளவு காணி (வெறுங்காணி) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-

0774200327, 0777044923

(C-6623)

வேலைவாய்ப்பை நோக்காக கொண்ட கல்வி தனித்துவமானது. வயது வேறுபாடு எதுவுமின்றி உங்களின் வேலை வாய்ப்புக்கென வடிவமைக்கப்பட்ட குறுகிய கால கற்கைநெறி. வீட்டிலிருந்தே வருமானம் ஈட்டலாம். முதலாவது கற்கைநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது. உங்கள் சுயவிபரங்களை தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அறிமுக செயலமர்வுக்கு அழைக்கப்படுவர்.

jfxacademy@gmail.com

(அ-6582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெந்தயம்

தொழில் நடத்துவது , வியாபாரம் செய்வது , எல்லாமே அதைச் செய்பவர்களின் இலாபத்துக்காக என்று பொதுப்படையாக ஓர் எண்ணம் இருந்தாலும் , அந்தத் தொழிலால் மக்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட சிந்தனை உள்ள ஒருவர் ஹோட்டல் நடத்தி வந்தார். அவரது ஹோட்டலில், ஒருநாள் "இன்றைய ஸ்பெஷல் வெந்தய தோசை" என்று எழுதி இருந்தது.ரவா தோசை , ஒனியன் தோசை , மசாலா தோசை என்று பல தோசைகளைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் . ஆனால் , இது என்ன வெந்தயத்தோசை? இதைப் பற்றி இதுவரை கேள்விப்பட்டதில்லையே. நல்லவேளை , அந்த ஹோட்டல் முதலாளி அங்கே இருந்தார். அவரிடம்அதுபற்றி விசாரித்த போது, அந்த வெந்தயத்தோசையைப் பற்றி பெரிய புராணமே சொல்ல ஆரம்பித்து விட்டார் .

"ஏதாவது ஒரு வகையிலே வெந்தயம் நம் உடலில் சேரவேண்டும். அது இந்த தோசை வடிவில் சேரட்டுமே என்பதற்காகத்தான் இதை நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம்'' என்று அவர் சொன்னார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் , வெந்தயத்தைப் பற்றி பல ஆச்சரியமூட்டும் தகவல்களையும் சொன்னார் .

வெந்தயக் கீரை , வெந்தய விதை இரண்டுமே மருத்துவ குணம் உடையது. வெந்தயக் கீரையை சமைத்து சாப்பிட்டால் , வயிற்று உப்பிசம் , மந்தம் இருமல் , நாக்கு மரத்துப் போதல் இவையெல்லாம் குறைந்து விடும் . வெந்தய விதையைக் காய வைத்து அரைத்துத் தடவினால் , புண்கள்விரைவில் குணமாகும்.

தீப்புண்கள் , வீக்கம் , கட்டிகள் மீது தடவினால் நிவாரணம் கிடைக்கும். வயிற்றுப் பொருமலோ , உப்பிசமோ இருந்தால் வெந்தயப் பொடியையும் , பெருங்காயப் பொடியையும் கலந்து மோரிலோ, தண்ணீரிலோ கலந்து குடித்தால் , நிவாரணம் கிடைக்கிறது.

இரத்தத்தில் சீனியின் அளவு கூடாமல் வெந்தயம் பார்த்துக் கொள்கிறது. ஆனால் இதை ஒருநாள்,இரண்டு நாள் சாப்பிட்டு முடித்து கொண்டால், பலன் இருக்காது. நீண்ட நாள் சாப்பிட்டுக் கொண்டே வந்தால்தான் அதற்கான பலன் கிடைக்கும்.

வயிற்றுப் போக்கு , சீதபேதி இதைக் குணப்படுத்துவதற்கு மருந்தாகவும் வெந்தயத்தைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் சில நேரம் பார்த்தீர்கள் என்றால் , நீண்ட தூரப் பயணம் போக வேண்டியிருக்கும். அந்த நேரத்தில் உங்களுக்கு வயிற்று உபாதை இருந்தால் பிரச்சினையாகிவிடும். இந்தப் பிரச்சினை ஏற்படாதிருக்க ஒரு யோசனை இருக்கிறது . வெளியூர் புறப்படுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னால் , இரண்டு ஸ்பூன் வெந்தயப் பொடியை வாயில் போட்டு தண்ணீரைக் குடித்து விட்டோம் என்றால் , அரை நாளைக்கு பிரச்சினை இல்லாமல் தாக்குப் பிடிக்கலாம்.

இரத்தத்தின் உற்பத்தி வேகத்தை வெந்தயம் அதிகப்படுத்துகிறது. குழந்தைக்கு தாய்ப் பால் கொடுக்கிற தாயாக இருந்தால் அந்த பால் உற்பத்தியை வெந்தயம் அதிகப்படுத்துகிறது . வெந்தயத்தை நன்றாக ஊறவைத்து, அரைத்து தலைக்குத் தேய்த்துக் குளித்தால் , முடி உதிர்வது நிற்கும். புதிய முடிகள் வளரும், உஷ்ணம் தணியும். வெந்தயத்தை தனியாக ஊற வைத்து அரைத்தும் பயன்படுத்தலாம். வேறு சில பொருட்களுடன் சேர்த்து ஷம்பூ மாதிரி தயாரித்தும் பயன்படுத்தலாம். அதாவது , நன்றாக காய வைத்த செம்பருத்தி இலை,செம்பருத்தி பூ , காய்ந்த துளசிஇலை ஆகியவற்றை நன்றாக அரைத்து பொடியாக்கி அதனை சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதோடு கொஞ்சம் சீயக்காய்ப் பொடியை சேர்த்துக் கொண்டோம் என்றால் தலைக்குத் தேய்த்துக் குளிக்க அருமையான ஷம்பூ கிடைத்து விடும்.

அதுமட்டுமல்ல , வெந்தயப் பொடியை தண்ணீரில் நன்றாக கரைத்து தலையில் தேய்த்தோம் என்றால் , பைத்தியம் பிடித்தவர்களுக்குக் கூட , அந்த பைத்தியத்தினுடைய வேகம் தணிய வாய்ப்பு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அடிக்கடி இப்படி வெந்தயத்தால் தலையில் தடவி தடவி அவர்களை குளிக்க வைத்துக்கொண்டே இருந்தால் நல்ல பலன் கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் ஹோட்டல் உரிமையாளர் சொல்லி முடித்தவுடன் , எனக்கு வேறொரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

பைத்தியத்தை தெளிய வைக்கிற ஒரு நிறுவனத்திற்குப் போய் , "ஒருத்தருக்கு பைத்தியம் தெளிந்து போய்விட்டதா , தெளியலையா? என்பதை எப்படி கண்டுபிடிப்பீர்கள் என்று கேட்டபோது , அவர்கள் சொன்னார்கள். ''பல வழிகள் இருக்கு. அதில் ஒன்று என்னவென்றால் , தொட்டியில் தண்ணீரை நிரம்பி வைத்துப் பயன்படுத்துகிறோம் இல்லையா? அப்படியான ஒரு தொட்டியில் தண்ணீரை நிரப்புவதற்கான பைப்பில் இருந்து தண்ணீர் விழுந்து கொண்டேயிருக்கும். ஒரு பைத்தியத்தைக் கூப்பிட்டு , அதனிடம் 'தண்ணீரை இறைத்து வெளியே ஊற்று என்று சொல்லுவோம். அது உடனே தண்ணீரை எடுத்து வெளியே ஊற்ற' ஆரம்பித்து விட்டால் அதற்கு பைத்தியம் தெளியவில்லை என்ற முடிவு செய்துவிடுவோம். ஏனென்றால் , பைப்பில் இருந்து தண்ணீர் விழுந்துகொண்டே இருப்பதாலே இறைக்க இறைக்கத் தொட்டியில் தண்ணீர் நிரம்பிக் கொண்டுதானே இருக்கும். ஆனால் பைத்தியம் தெளிந்து போன உடனே ஒருத்தன் என்ன செய்வார் என்றால், போன உடனே முதலில் அந்த பைப்பை மூடி விடுவார்.அப்போது இவர் தெளிவாகிவிட்டார் என்று நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிடுவோம். இந்த டெஸ்ட்டை பைத்தியம் பிடித்தவர்களுக்கு அது தெளிந்துவிட்டதா, இல்லையா? என்ற சோதிப்பதற்கு மட்டுமல்ல , சாதாரணமாக இருப்பவர்களுக்குக் கூட, அவர்கள் புத்திசாலியா, இல்லையா?என்று கண்டுபிடிப்பதற்கும் செய்து பார்க்கலாம்.

இளசை சுந்தரம்

# விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சைக்கு 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளின் கல்வி தகைமைகளாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தோற்றி சிங்களம், தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல், விலங்கியல், தாவரவியல், விவசாயம், இரசாயனவியல், பௌதீகவியல் போன்ற பாடங்கள் இரண்டுடன் விஞ்ஞான பாடங்கள் மூன்று சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் தொழிற்றகைமையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் விவசாயம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழை பெற்றிருப்பது கட்டாயமானதாகும்.

பரீட்சைக்கட்டணமாக 600 ரூபாவை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தினுள் இணைத்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப்பரீட்சை திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை சிறை, பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை நேற்றைய வர்த்தமானியிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (அ)

# கிராம சேவகர்களுக்கு மார்ச் 6 இல் நியமனம்

(கொழும்பு)

திறந்த போட்டிப் பரீட்சைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளள 3 ஆயிரத்து 500 கிராம சேவகர்களுக்கான நியமனம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் விசேட வைபவத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டு புதிய கிராம சேவகர்களுக்கான நியமனத்தைக் கையளிக்கவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி. பி. அபேகோன் தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் தென்மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் காலங்களில் புதிய அரச நியமனங்கள் வழங்குவது தொடர்பில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன பேச்சுவார்த்தை நடத்தியுள்ள தாகவும் அதன் போது எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நியமனத்தை வழங்க முடிவு செய்ததாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

சிறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கிராமசேவகர்களின் பெயர் விபரங்கள் கடந்த வாரம் இணையத் தளங்களில் வெளியிடப்பட்டிருந்தன. இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அமைச்சினால் தற்போது அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக நியமனம் பெறும் கிராம சேவகர்கள் வடக்கு கிழக்கு உட்பட வெற்றிடமுள்ள பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 70 | 20 |
| உருளைக்கிழங்கு | 70 | 50 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 100 |
| தக்காளி | 20 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 90 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 30-100 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 80 | 120 |
| பாகற்காய் | 60-100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 160 | 160 | 100 |
| லீக்ஸ் | 50 | 90 | 80 |
| பீற்றூட் | 20 | 70 | 40 |
| கறிமிளகாய் | 70 | 150 | 80 |
| முருங்கைக்காய் | 400 | — | — |
| போஞ்சி | 40 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 15 | — | — |
| கீரை - 1பிடி | 5-15 | 30 | 20 |
| தேசிக்காய் | 30-50 | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

# இராசி பலன்

01.03.2014
(மாசி 17, சனிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
அமாவாசை பிறபகல் 2.42 மணிவரை
சதயம் முன்னிரவு 8.25 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை
சுபநேரம் 3.28-4.58 மணிவரை
அமாவாசை விரதம்

**மேடம்** அதிர்ஷ்டமான நாள்,வருமானம் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு,தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும், கலகலப்பான நாள்.

**இடபம்** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், புதிய திட்டங்கள் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு, தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம்.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**சிங்கம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், திடீர்ப் பயணங்கள் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம்,புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம்,பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்,தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து கொள்வர்.

**விருச்சிகம்** கல்வியில் ஆர்வம் கூடும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், தேக நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் நாடகத்தை அரங்கேற்ற இனிமேலும் தடையில்லை

## யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர்

தமிழர்களின் வீரம் செறிந்த பண்பாட்டை எடுத்தியம்பும் பண்டாரவன்னியன் நாடகத்தை எங்கு வேண்டுமானாலும் அரங்கேற்றலாம். அதற்கு பொலிஸார் இடையூறாக இருக்க மாட்டார்கள் என யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தீவகம் தம்பாட்டி கிராம் நிகழ்வில் மேடை ஏற்றுவதற்காக ஆற்றுகை செய்யப்பட்டுக் கொண்டிருந்த பண்டார வன்னியன் நாடகத்தினை இடைநிறுத்தும் முயற்சியாக கடந்த 25 ஆம் திகதி குறித்த நாடகத்தை ஆற்றுகை செய்ய வேண்டாமென ஊர்காவற்றுறை பொலிஸார் தடைவிதித்திருந்தனர்.

இச் சம்பவம் குறித்த யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கேள்வியெழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவகம் தம்பாட்டி கிராமத்தில் மேடையேறவிருந்த பண்டார வன்னியன் நாடகத்திற்கு நாம் தடை விதிக்கவில்லை.

தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றைச் சித்திரிக்கும் இந்நாடகத்தை அரங்கேற்ற இனியும் எவ்வித இடையூறும் பொலிஸாரால் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் பதிலளித்தார். (அ-4)







நன்றி:-அததெரண

# ஹாட்லி கல்லூரி விடுதி திறப்பு இன்று

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் விடுதி இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்டு கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.யோகேந்திர நாதன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் ஏ.கரன் அவரது மனைவி பாபராம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விடுதியை திறந்து வைக்கவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஹாட்லிகல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விடுதிக்கு பழைய மாணவர் ஏ.கரன் ஆறு கோடி ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-10)

# வடக்கு மாகாணசபையிலும் மக்களின் வரிப்பணத்திலேயே மதிய உணவு

## சுட்டிக்காட்டியுள்ளார் யாழ்.முதல்வர்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபையில் எதிரணியிலிருக்கும் போது மக்களின் வரிப்பணத்தில் மதிய உணவு கொடுக்கப்படுவதாக கூறி அதனைப் புறக்கணித்த கூட்டமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் தற்போது மாகாணசபையில் மதிய உணவைப்புறக்கணிக்காதது ஏன் என யாழ்.மாநகரசபைமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேள்வியெழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சியாகயிருக்கும் போது எல்லாவற்றையும் புறக்கணித்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஆளும்கட்சியாக வந்தவுடன் அவற்றை ஏற்று நடந்துகொள்வதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இதேவேளை யாழ்.மாநகரசபையினால் மட்டும் தான் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் என்று கோசமிடுவதைவிடுத்து மாகாணசபையின் ஊடாக வீதிகளை புனரமைக்க முன்வரவேண்டுமெனவும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் இந்த மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டத்தின்போதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் எதிரணியின் வரிசையிலிருந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபையில் தான் கொண்டுவந்த மதிய உணவை காண்பித்து மாநகரசபையினால் வழங்கப்படும் மதிய உணவை நாம் புறக்கணித்து மக்களின் வரிப்பணத்தில் மதிய உணவைப்பெற்றுக் கொள்ள நாம் விரும்பவில்லை என்று உரத்த குரலில் சபையில் வாதிட்டார்.

இதன்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியாகவிருக்கும் போது ஒருநிலைப்பாட்டையும் ஆளும்கட்சியாகவிருக்கும் போது ஒரு நிலைப்பாட்டினை எடுப்பதனை வாடிக்கையாக கொண்டுள்ளனர் என்று சாடியதோடு முன்னர் யாழ். மாநகர சபையின் எதிரணியிலிருந்து தற்போது வடக்கு மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் தான் முதலில் மாநகர சபையில்மதிய உணவு கொடுப்பதை நிறுத்த வேண்டும என்று கூச்சலிட்டனர். அதனை விட மக்களின வரிப்பணத்தில் தாம் மதிய உணவைப் பெற்றுக் கொள்ள போவதில் லையென்றும் கூறி புறக்கணித்திருந்தனர்.

ஆனால் தற்போது வடக்கு மாகாண சபையில் மதிய உணவு கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சபையில் கொடுக்கப்படும் மதிய உணவும் மக்களின் வரிப்பணத்திலிருந்தே கொடுக்கப்படுகின்றது என்பதை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் குறித்த இரண்டு உறுப்பினர்களும் அறியவில்லையா? என்றும் கேள்வியெழுப்பிய அதேவேளை மதிய உணவுடன் ஐஸ்கிறீமும் கொடுக்கப்படுவதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

இவ்வாறு யாழ்.மாநகரசபையில் மதிய உணவுப்பிரச்சினையில் மாகாண சபையின் விவகாரங்களும் பேசப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மெழுகுதிரி உற்பத்திக்கான அச்சுக்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலைய அங்கத்தர்களின் உற்பத்தித் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் Barath State Bank Of India யாழ்ப்பாணக் கிளையால் மெழுகுதிரி உற்பத்திக்கான அச்சுக் கடைகள் நேற்றைய தினம் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந் நிகழ்வில் Barath State Bank Of India இன் முகாமையாளர் வேலாயுதம் சிவபாலன் கலந்து கொண்டு அச்சுக்களை வழங்கி வைப்பதையும் கருவி சமூக வள நிலையத்தின் தலைவர் தி.க.தர்மசேகரம் அச்சி னைப் பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம். (அ)

# மாணவிகளுடன் சேட்டை; இளைஞன் அகப்பட்டான்

கரவெட்டிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவிகள் மீது அன்றாடம் வீதியில் சேட்டை புரிந்து வந்த இளைஞர் குழுவைச் சேர்ந்த ஒருவன் பெற்றோரால் மடக்கி பிடிக்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கரவெட்டிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று வருகின்ற மாணவிகளுடன் வீதியில் குழுமியிருந்து சேட்டைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து பெற்றோர்கள் சம்பவ தினம் ஒன்று கூடி இளைஞர் குழுவை பிடிக்க முயன்றுள்ளனர்.

ஆயினும் ஒரு இளைஞன் மாத்திரமே பிடிபட்டதோடு ஏனையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இவ் விடயத்தை பெற்றோர்கள், நெல்லியடிப் பொலிஸாருக்கும் அப்பகுதி கிராம சேவையாளருக்கும் தெரியப்படுத்தியதுடன் பிடிபட்ட இளைஞனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பிடிபட்டுள்ள இளைஞனை வைத்து தப்பியோடிய ஏனைய இளைஞர்களை கைது செய்வதற்கான முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ-9-60)

# கச்சதீவு திருவிழாவுக்கு 6500 பேர் வருகை தருவர்

கச்சதீவு திருவிழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பயணிப்பதற்கு ஏற்ற வகையில் விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி திரு விழாவிற்கு இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து 6ஆயிரத்து 500 பேர் வரையிலும் வருவார்கள் என தான் எதிர பார்ப்பதாகவும்யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகம் தெரிவித்துள்ளார்.

கச்சதீவுத் திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. இந்நிலையில் கச்சதீவு திருவிழா தொடர்பாக கடந்த செவ்வாய்க் கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதன்படி யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவான் வரையிலும் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகள் சேவையில் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும்ஈடுபடும். தொடர்ந்து குறிகட்டுவானில இருந்து கச்சதீவு வரையிலும் தனியார் படகுகள சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் படகு கட்டணமாக ஒருவருக்கு 250 ரூபா அறவிடப் படும்.

அத்துடன் குடிநீர் வசதியும் ,இலகுவான முறையில் உணவை பெற்றுக்கொள் வதற்காக கச்சதீவில் உ[illegible] ளன என அ[illegible] தெரிவித்தார்.

# கடற்றொழில் அமைப்புக்களால் 4 தீர்மானங்கள் நிறைவேற்றம்

யாழ்.மாவட்ட கிராமிய அமைப்புக்களின் கூட்டான மாவட்டக் கடற்றொழில் சம்மேளனத்தின் கலந்துரையாடலில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் அபிவிருத்தி அமைப்புக்ளின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் நீரியல் வளத்துறை பனிமனையின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இராணுவத்தினர், கடற்படையினர், சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பண்ணைக் கடலோரத்தில் வீதியின் இரு மருங்கிலும் கரையிலிருந்து 5 மீற்றர் தூரத்திற்கு சிறகு வலை பயன்படுத்தக்கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடுதடைசெய்யப்பட்டுள்ள இழுவைப் படகு, தங்கூசி வலை, டைனமற் பாவித்தல் என்பன தடைசெய்யப்படவேண்டும்.

இறால் மடிக்கு இரும்புகள், கம்பிகள், சங்கிலிகள் என்பன பயன்படுத்தக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிறகு வலைகளுடன் இறால் கூடுகள் இணைக்கப்பட்டு தொழில்நடவடிக்கையை முன்னெடுக்ககூடாது ஆகிய நான்கு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. (அ-9-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் மன உணர்வுகளை தடைகள்மூலம் அடக்க முடியாது

## வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் உணர்வுகளை தடைகள் மூலம் அடக்கிவிடமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

தீவகம் தம்பாட்டி கிராமத்தில் அவர்களது கிராம நிகழ்வில் மேடை ஏற்றுவதற்காக தயாரப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த பண்டார வன்னியன் நாடகத்தை இடைநிறுத்தும் முயற்சியாக நேற்று முன்தினம் பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று நாடகத்தை பழக்கி மேடையேற்ற வேண்டாம் என தடை விதித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இன்று குறிப்பிட்ட மக்கள் காரணத்தை கேட்பதற்காக பொலிஸ் நிலையம் சென்ற போது அந்நாடகத்தில் அரசாங்க விரோத கருத்துக்கள் அடங்கியுள்ளன. அந்நாடகத்தை தாம் பார்வையிடவேண்டும் என வற்புறுத்தியுள்ளனர்.

பின்னர் பொலிஸாரோடு புலனாய்வுத் துறையினரும் இணைந்து சுமார் நான்கு மணி நேரமாக குறிப்பிட்ட நாடகத்தை பார்வையிட்டுள்ளனர்.

தமிழர்களுடைய வீரம் செறிந்த வரலாற்றோடு உணர்வுபூர்வமாக கலந்துவிட்ட மாவீரன் பண்டார வன்னியனின் வரலாற்றை மீள் நினைக்கக்கூடாது என்கின்ற சிந்தனையோடு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதன்மூலம் மக்கள் அரசாங்கத்தின் கபடங்களுக்கு எதிராக மாறி விடுவர் என அரசாங்கமும் அவர்களுடைய படைகளும் அஞ்சுகின்றன. இச்சம்பவமானது மக்களுடைய உரிமையை நேரடியாகவே மறுக்கின்ற ஒரு சம்பவமாகும்.

அரசியலமைப்பில்சொல்லப்பட்டுள்ள கலாசார உரிமைகளைப் பறிக்கும் ஓர் செயற்பாடாகும்.

இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகள் மூலமாக தமிழர்களுடைய உணர்வுகளை கட்டுப்படுத்தி விட முடியும் எனவும் அவர்களை அடிமைகளாக நடத்தலாம் என யாராவது கருதுவார்களேயானால் அது மிகப் பெரியமுட்டாள்தனமாகவே இருக்கும்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழர்களுடைய உணர்வுகளை தொடர்ச்சியாகவே சீண்டிப் பார்க்கின்றது. இச்சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அரசாங்கமானது தமிழர்களின் கலை, கலாசார உணர்வுகளை மதித்து நடந்து கொள்ளவேண்டும் எனவும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். (அ-6)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
ஸ்தாபக தினம்(01.03.2002)

இன்று 13 ஆவது ஆண்டில் சேவைக்காக காலடி பதிக்கும் எமது கலாமன்றத்தின் சேவைகளை மனதார வாழ்த்தி வணங்குவதோடு மன்றத்தின் சேவைகள் மேலும் வளர்வதற்கு ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளை பிரார்த்திக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர். (5711)

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.





சேவைநலன் பாராட்டு

திரு. அண்ணாமலை யோகேஸ்வரன்
(B.A. Dip in Edu)

எமது பாடசாலையில் ஆறு வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி பாடசாலை வளர்ச்சிக்காக அயராது உழைத்து 01.03.2014 இல் இருந்து ஓய்வு பெறும் எமது அதிபர் திரு.அண்ணாமலை யோகேஸ்வரன் அவர்களை ஓய்வுக் காலத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் பெற்று நீடூழி வாழப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அன்புடன் வாழ்த்துவோர்:
யா/ அல்வாய் வடக்கு இ.த.க.பாடசாலை, அல்வாய்.
ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி-6619)


### கோபிதாஸின் மரணம் தொடர்பில்

# பொய்யான பிரசாரம் செய்தால் நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி கைதியின் மரணம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை முன்னெடுப்போருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சீ.பல்லேகம தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிக் கைதி விஸ்வலிங்கம் கோபிதாஸின் மரணத்தை சில தமிழ் அரசியல்வாதிகள் கொலையாக சித்திரிக்க முயல்கின்றனர்.

இவ்வாறான அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

கப்பல் மூலம் புலிகளுக்காக ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டமைக்காக கோபிதாஸனுக்கு ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இருதயத்தின் உட்புற நரம்பு ஒன்று வெடித்த காரணத்தினால் கோபிதாஸன் உயிரிழந்துள்ளார் என்பது மரண விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இவ்வாறான ஓர் நிலையில் சில தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.புலி உறுப்பினரின் மரணம் தொடர்பில் போலிப் பிரசாரம் செய்வது எவராக இருந்தாலும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி இராமலிங்கம் இராகினி

J/ 108 கிராம உத்தியோகத்தர், லயன் சீமாட்டி திருமதி. இராமலிங்கம் இராகினி அவர்களின் மணிவிழா சிறப்புற, வாழ்வாங்கு வாழ வாழ்த்தும்...

(சி-6611)

நல்லூர் பிரிவு சிங்கராசா ஸ்ரீதேவி, சிவராசா கிருபாதேவி. குடும்பத்தினர்.



கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 27 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: 8 ஆம் வகுப்பு / வெல்டிங் வேலை<br>தொ.இ: B/2872 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 28 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, BIT – Following / தனியார் நிறுவன வேலை<br>தொ.இ: G/08 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 56.75<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: B/2873 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 41.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர் (நோர்வே PR)<br>தொ.இ: G/70 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 07 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/2874 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>தகைமை/தொழில்: A/L / அழகு கலைஞர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/1144 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23.75<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BBM, PGDIPM, MSLIM / விரிவுரையாளர்<br>தொ.இ: B/2875 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 37 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSMS (சித்த மருத்துவம்)<br>தொ.இ: G/1764 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலையால் பயிர்ச்செய்கையில் பிரச்சினைகளும் பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் தேவையும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 48-I



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விவசாயமும் கடற்றொழிலும் இயற்கையை நம்பி செய்கின்ற தொழில்கள். இவ்வுலகத்தவருக்கு உண்ண உணவு கொடுக்கும் அவசியமான அடிப்படைத் தொழில்கள் இவை. இரண்டுக்குமே ஒற்றுமை, வேற்றுமை என பல இருப்பினும் இவையிரண்டும் எமது பிரதேசத்துக்குரிய வளங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற தொழிற்றுறைகள். விவசாயத்தை நாம் முழுக்க முழுக்க நம்பியிருந்தாலும் எமக்கிருக்கும் வளங்களுள் கடல் வளமும் முக்கியமானதாகும். இலங்கையின் நிலப்பரப்புடன் ஒப்பிடுகையில் கடல் வளம் 8 மடங்கிருப்பதால் இலங்கையை சிறிய தீவு என வருணிப்பவர்களுடன் வாக்குவாதப்படுபவர்களும் உண்டு.

உண்மையில் இலங்கையைச் சுற்றியிருக்கின்ற கடல் வளம் அளப்பரியது. எமக்கு எமது வளங்களைப் பற்றிய அறிவும் தெளிவும் இல்லாததனால் நாம் இன்னொருவர் கையை ஏந்தியிருக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியிருக்கின்றோம்.

விவசாயத்திற்கு இவ்வாண்டின் ஆரம்பமும் மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை. இவ்வாண்டு ஆரம்பம் இனிதாகத்தான் மலர்ந்தது! இயற்கையினை வணங்கி படைத்து வழக்கமான பொங்கல் நிகழ்வுகளெல்லாம் சிறப்பாகத்தான் நடந்தது. ஆனால் இயற்கையின் விபரீதம் இம்முறை அவசரமாக வருட ஆரம்பத்திலேயே நடந்தேறியிருக்கின்றது.

அநேகமாக விவசாய பெருமக்களை திக்குமுக்காட வைத்து வாட்டியுமெடுத்திருக்கின்றது. ஒரு முறை இரு முறையல்ல தொடர்ந்து பல விளைவுகள், விவசாய பெருமக்களின் முயற்சிகளை மாற்றி பிரட்டிப் போட்டிருக்கின்றது. இயற்கையின் விபரீதம் இங்கு மட்டுமல்லவே, உலக நாடுகளையும் ஒரு தரம் உருட்டியெடுத்திருக்கின்றது. இருப்பினும் இவ் விளைவுகளுக்கு நாமும் காரணம் என இன்னும் நாம் புரிந்து கொள்ள தலைப்படவில்லை. பயிர்ச் செய்கையாளர்களுக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் கடினமான காலமாக நடந்தேறியிருக்கின்றது. குளிர்ப் பிரதேசங்கள் மேலும் வலுப்பெற்று குளிர்ந்திருக்கின்றன. மறுபக்கத்தில் வரட்சியால் நொந்து போயிருக்கும் பிரதேசங்கள் மேலும் வரண்டு வரட்டியுமெடுத்திருக்கின்றன. காலநிலை மாற்றத்தினாலான விளைவு என சுருக்கிக் கூறினாலும் விவசாய பெருமக்களுக்குள்ள சோகத்தை போக்க இம்முறை வழியெதுவும் விரைந்து தேட முடியவில்லையே என்ற ஆதங்கம் இன்னும் நெஞ்சில் கனக்கின்றது. குறிப்பாக வெங்காயச் செய்கையாளர்களை மீண்டும் மீண்டும் வாட்டியெடுத்திருப்பது மனதிற்குள் இன்னும் நெருடலாகவே இருக்கின்றது.



வெங்காயம் இப்படி அழுகுவதற்கு பூஞ்சணங்களின் தொற்று காரணமாகும்

வருட ஆரம்பத்தில் வெங்காயம் பயிர்செய்யப்பட்ட பிரதேசங்களில் வெங்காயப் பயிரில் ஏற்பட்ட பலவகையான பூஞ்சண நோய்கள் இப்பயிர்ச்செய்கைக்கு சவாலாகவே அமைந்தது. குறிப்பாக கழுத்தழுகல், இலை வாடல் நோய், இலைப்புள்ளி நோய், இலையில் கீழ்துகள் பூஞ்சணம் மற்றும் இலைச்சுருளல் நோய் என்பன வெங்காயப்பயிரை வளரவிடாமலும் வளர்ந்த பயிரில் குமிழ் தோன்றி வளர்வதைத் தடுத்ததனையும் ஆய்ந்து கண்டுகொண்டோம். வழக்கமாக பூஞ்சண நோய்களனைத்தும் இவ்வாறு சேர்ந்து வருவது குறைவு. ஆனால் சென்ற வருடமும் இம்முறையும் நோயாக்கிகளுக்கு காலநிலை ஏதுவாக இருந்ததனால் வெங்காயப் பயிருக்கு அதுவும் எமது பிரதேசத்து பணப்பயிருக்கு இப்படியொரு சேதம் ஏற்பட்டிருக்கின்றது. விவசாயப் பெருமக்கள் பலவழிகளில் இந்நோய்களை கட்டுப்படுத்த பூஞ்சண நாசினிகள் பலவற்றை தெளித்திருக்கின்றார்கள். எப்படி முயன்றும் வெங்காயத்தில் ஏற்பட்ட இழப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. நாளாக நாளாக பூஞ்சணத்தின் விருத்தியும் நோய் பரவும் வேகமும் அதிகமானதே தவிர கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை.

காலம் மாறிப்பெய்த மழையினால் அனைத்துமே நாசமாகிவிட்டது. வரண்ட வலையத்தில் இப்படி மழை பெய்வது அரிதாகினும் இம்முறை பெய்த மழை பயிர்களுக்கு சேதத்தை விளைவிக்க காரணமாகிவிட்டது. மண்ணில் சும்மாயிருந்த பூஞ்சணங்களெல்லாம் வரங்கிடைத்தது போல விரைந்து பெருகி தாக்கியதால் வெங்காயப்பயிர் நிலைகுலைந்து விட்டது போக வெய்காயச் செய்கையாளர்களுக்கும் சவால் விடுத்திருக்கின்றது. வந்த பூஞ்சணங்கள் மண்ணில் வாழும் தன்மையுடையன என்பது ஒருபக்கமிருக்க அவற்றினது வித்திகளை நன்றாக உற்பத்தி செய்து விளைநிலம் முழுக்க பரவிவிட்டிருக்கின்றது. மேலும் மேலும் மழை பெய்தது அழிவுக்ாகினும் பனிப்பொழிவினால் இரவு நேர வளிமண்டல வெப்பநிலை மிகவும் குறைந்து ஈரப்பதன் அதிகரித்திருக்கின்றது. பொதுவாகவே பூஞ்சண நோய்களின் விருத்திக்கு வளிமண்டல ஈரப்பதன் அதிகமாக இருப்பது சாதகமானதாகும். (தொடரும்)

# கால்வாய் நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை முன்னெடுப்பு

(கொழும்பு)

நாட்டின் 11 மாவட்டங்களில் பரவியுள்ள கால்வாய் நோயை கட்டுப்படுத்த சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நோய் ஏனைய மாவட்டங்களுக்கும் பரவினால் நாட்டின் பால் மற்றும் இறைச்சி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது.

கால்நடைகளை அறுப்பதும் எடுத்துச் செல்வதும் 3 மாதங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளதோடு 3 மாதங்களின் பின்னர் கால்வாய் நோய் குறைந்திருந்தால் தடை நீக்கப்படும் எனவும் இன்றேல் மேலும் தடை நீடிக்கப்படும் எனவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ. சிவஜோதி தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுமார் 15 இலட்சம் கால்நடைகள் உள்ள போதும் கடந்த வருடம் 4 இலட்சம் கால்நடைகளுக்கே கால்வாய் நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு வருடத்தில் இரு தடவைகள் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட பணிப்பாளர், கால்நடை பண்ணையாளர்கள் தடுப்பூசி ஏற்ற தவறுவதாலேயே இந்த நோய் பரவியுள்ளதாக தெரிவித்தார்.

கால்வாய் நோய் பரவியதன் காரணமாக ஆடுகள், மாடுகள், பன்றிகள் அடங்கலாக 84 கால்நடைகள் இறந்துள்ளதோடு சுமார் 3 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு இந்த நோய் பரவியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. குளம்பு உள்ள விலங்குகளுக்கே இந்த நோய் பரவி வருகிறது.

இதுவரை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைதீவு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் கால்வாய் நோய் பரவியுள்ளது.

நோய் பரவியுள்ள பிரதேசங்களில் 300 கால்நடை வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு வாரமும் இவர்களிடமிருந்து அறிக்கை பெறப்படுவதாக பணிப்பாளர் தெரிவித்தார். மூன்று மாதங்களுக்கு நோய் குறித்து கண்காணிக்கப்பட்ட பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

கால்நடைகளுக்கு முறையாக தடுப்பூசி வழங்கப்பட்டதன் காரணமாக கடந்த வருடங்களில் கால்வாய் நோய் குறைந்ததாக கூறிய அவர் கால்நடை பண்ணையாளர்களின் கவனயனத்தினால் மீண்டும இந்த நோய் பரவி வருவதாக தெரிவித்தார்.

90 லீற்றர் பால் சுரக்கக்கூடிய பசு மாடொன்று கால்வாய் நோய் பரவிய பின்னர் 10 லீற்றர் பால் தரும் எனவும் மாடுகளை அறுப்பது மற்றும் எடுத்துச் செல்வதை தடுக்கும் வர்த்தமானி குறித்து உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் பொலிஸாரை அறிவூட்டியுள்ளதாகவும் பணிப்பார் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து கால்வாய் நோய் புத்தளத்துக்கு எடுத்து வந்ததால் புத்தளத்திலும் இந்நோய் பரவியுள்ளது.

இந்த தடையை மீறுபவர்களுக்கு ஆறு மாத சிறையும் 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்க முடியும். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை நல்லாட்சி செய்வது குறித்து எவரும் சொல்லித்தர தேவையில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி ஏற்படுத்துவதற்கான உதவிகளையோ அல்லது வழிகாட்டல்களையோ இலங்கை எந்த ஒரு நாட்டிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், பொது மக்களின் உச்ச கட்ட நலன்புரி வசதிகளை கருத்திற்கொண்டு நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் இடம்பெற்று வரும் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியை பார்வையிட நேற்று முன்தினம் வருகை தந்த பாதுகாப்புச் செயலாளர், கண்காட்சி வளாகத்தில் பொலிஸ் காட்சிக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி கைவிரல் ரேகை அடையாள வலையமைப்பை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு முன்னர் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஏற்கனவே முன்னெடுத்துள்ள பாரிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் பார்க்க வேண்டும்.

ஆரம்பிக்கப்பட்ட தானியங்கி கைவிரல் ரேகை அடையாள வலையமைப்பு திட்டத்தை மக்களுக்காக அறிமுகப்படுத்தியமை நல்லாட்சியை வலுப்படுத்துவதற்கான பாரிய வேலைத்திட்டங்களில் ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களின் பாதுகாப்பு மேலும் உறுதிப்படுத்தப்படுவதுடன், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது. இது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நல்லாட்சியை ஏற்படுத்த உதவியாக அமைகிறது.

இந்தப் புதிய வேலைத்திட்டம், வலையமைப்பின்மூலம் குற்றச்செயலகளில் ஈடுபடுவர்களை மிகவும் இலகுவாக அடையாளங் காண முடிகிறது. இதன மூலம் சட்டத்தையும், ஒழுங்கையும் உடனடியாக அமுலபடுத்த முடியும்.

பொலிஸ் அதிகாரிகளினதும், எமது நாட்டிலுள்ள கணனி நிபுணர்களினதும், அர்ப்பணிப்பான சேவைகளின ஊடாக உருவான தானியங்கி கைவிரல் ரேகை அடையாள வலையமைப்பை எமது நாட்டின் தயாரிப்பு என்பதை பெருமையுடன் கூற முடியும்.

அர்ப்பணிப்பு மூலம் சகலவற்றையும் சாதிக்க முடியும். சர்வதேச படையினரை, பொலிஸாரை விட எமது பொலிஸ் அதிகாரிகளிடமும், புத்திஜீவிகளிடமும் சுயமான திறமை உள்ளது என்பதை இது உறுதிப்படுத்திக் காண்பிக்கிறது. எனவே, சகல விடயங்களுக்கும் நாங்கள் வெளிநாடுகளிடம் சென்று கையை நீட்டி கேட்கத் தேவையில்லை, இந்த தகவலை உலகிற்குச் சொல்லும் பொறுப்பு ஊடகத்தைச் சார்ந்தது.

நல்லாட்சி செய்யும் திறமை எமக்கு உள்ளது. எனவே நல்லாட்சி தொடர்பில் எமக்கு எவரும் சொல்லித்தரத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# காணாமற் போனவர்கள் குறித்து ஐ.சி.ஆர்.சி ஆய்வு

(கொழும்பு)

காணாமற் போனவர்களின் குடும்பங்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை தாம் ஆரம்பித் துள்ளதாக சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் தெரிவித்துள் ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடனேயே இதை தாம் செய்வதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்த மதிப்பீடானது காணாமல் போனவர்கள் குறித்த முடிவு தெரியாமல் இன்னமும் தொடரும் சம்பவங்கள் குறித்து மறு ஆய்வு செய்து, உறுதி செய்யவும், அதே போன்று இந்த விவகாரம் குறித்து தீர்வு, காணப்பட்ட விடயங்களை முடிவுக்கு கொண்டுவரவும் உதவும் என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.

16 ஆயிரத்துக்கும் அதிகமான காணாமல் போன சம்பவங்கள் குறித்த பதிவுகள் தம்வசம் இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், காணாமற் போனவர்கள் குறித்து ஒரு சர்வதேச அமைப்பு மேற்கொள்ளும் முதலாவது கணிப்பீடு இதுவாகும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். (அ-2)

# கரைச்சி கோட்டத்தில் நடைபெற்ற பெரு விளையாட்டு போட்டி முடிவுகள்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி கோட்ட மட்ட பாடசாலைகளின் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இதுவரை நடைபெற்றுமுடிந்த பெருவிளையாட்டுப் போட்டிகளில் கபடி, எல்லே, உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்து, வலைப்பந்து ஆகிய போட்டிகளின் முடிவுகள் சில வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தைப்போன்று இம்முறையும் கபடிபோட்டியில் 19 வயது பிரிவு ஆண், பெண் மற்றும் 15 வயது பிரிவு ஆண், பெண் ஆகிய பிரிவுகளில முதலாமிடத்தை கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை பெற்றுக் கொண்டது.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றபாடசாலைகள் விபரம் வருமாறு,

**உதைபந்து (பெண்கள்)**

கிளி/சிவநகர் அ.த.க, கிளி/உருத்திரபுரம் ம.வி, கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா

**துடுப்பாட்டம் (பெண்கள்)**

கிளி/கனகபுரம் ம.வி, கிளி/புனிததெரசா பெண்கள் ம.வி, கிளி/சிவநகர் அ.த.க

**எல்லே(பெண்கள்)**

கிளி/கனகபுரம் ம.வி, கிளி/திருவையாறு ம.வி, கிளி/அக்கராயன் ம.வி

**கபடி(19 வயது பெண்கள்)**

கிளி/சிவநகர் அ.த.க, கிளி/உருத்திரபுரம் ம.வி, கிளி/இந்துக் கல்லூரி

**கபடி(19 வயது ஆண்கள்)**

கிளி/சிவநகர் அ.த.க, கிளி/கனகாம்பிகை குளம் அ.த.க, கிளி/உருத்திரபுரம் ம.வி

**கபடி(15 வயது ஆண்கள்)**

கிளி/சிவநகர் அ.த.க, கிளி/கனகாம்பிகை குளம் அ.த.க, கிளி/உருத்திரபுரம் ம.வி

**கபடி(15 வயது பெண்கள்)**

கிளி/சிவநகர் அ.த.க, கிளி/மத்திய கல்லூரி, கிளி/இந்துக் கல்லூரி (அ-254)

# இலங்கைமீதான தீர்மானத்தை எதிர்பார்த்திருக்கின்றேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில், சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கியூபா போன்ற நாடுகள் பல தீர்மானங்களை சந்தித்தன. இலங்கை மூன்று தீர்மானங்களை சந்தித்துள்ளது. ஆனால் ஆட்டம் காணவில்லை.

ஜெனீவா பிரச்சினை பற்றி கவலையொன்றும் இல்லை என்றாலும், அது இன்னும் ஒரு தலைவலியாக இருக்கிறது.

கியூபா நாடு 60 தீர்மானங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அதனை தீவிரமாக எடுக்கவில்லையென கியூபா ஜனாதிபதி கூறியதாக மகிந்த ராஜபக்ஷ நினைவு கூர்ந்தார்.

30 ஆண்டுகள் உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட போதிலும் ஒரு வலுவான, உறுதியான பொருளாதாரத்தை கொண்ட இலங்கை மீது சில நாடுகள் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதனை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்.

நாட்டிலுள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி செய்திருப்பதை தவிர, ஏனைய மனித உரிமைகள் ஒன்றும் பெரிய விடயம் இல்லை.

தம்மை அபிவிருத்தி குறித்து சிந்திக்கவிடாமல், சர்வதேசத்தின் கேள்விகளுக்கு பதில் வழங்கிக் கொண்டே இருக்கும் வகையிலான சூழ்நிலையில் சிக்கவைக்க சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை மிகவும் வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகிறது.

தற்போது நாட்டின் அபிவிருத்தியே அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது என்றார். (அ-2)

# சத்திரசிகிச்சைக்கு உதவிவழங்கும் நிபுணர்கள் பணிப்புறக்கணிப்பு

## சத்திரசிகிச்சைகள் பாதிப்பு

தமது கோரிக்கைகளுக்கு எழுத்துமூலமான உறுதிமொழி வழங்கப்படும் வரை, இருதயம் மற்றும் நுரையீரல் அதிகாரிகளின் பணிப் பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக இருதய மற்றும் நுரையீரல் தொடர்பான சிகிச்சைகளுக்கு உதவி வழங்கும் நிபுணர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் கமனி குணரத்ன தெரிவித்தார்.

எனினும் அது தொடர்பில் எழுத்துமூலம் அறிவிக்கும் வரை பணிப் பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இருதய மற்றும் நுரையீரல் தொடர்பான சிகிச்சைகளுக்கு உதவி வழங்கும் நிபுணர்களின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக நாட்டிலுள்ள பிரதான 4 வைத்தியசாலைகளின் இருதய சத்திர சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இருதய சத்திர சிகிச்சைகள் பிற்போடப்படலாம் எனவும் வைத்தியசாலைகளின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சம்பள சுற்றுநிருபத்தில் காணப்படுகின்ற சம்பள முரண்பாடுகளை நீக்குமாறும், தமது கடமையின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அனர்த்த கொடுப்பனவையும், சிரேஷ்டத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நிலையான மேலதிக நேர கொடுப்பனவை யும் வழங்குமாறு வலியுறுத்தி இருதய மற்றும் நுரையீரல் தொடர்பான சிகிச்சைகளுக்கு உதவி வழங்கும் நிபுணர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய வைத்தியசாலை, கண்டி வைத்தியசாலை, கராபிட்டி போதனா வைத்தியசாலை, கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளைச் சேர்ந்த 33 அதிகாரிகள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் பங்கேற்றுள்ளனர். (அ-2)

# எதிர்க்கட்சி தலைவர் பதவி விலகவேண்டும்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன செய்து கொண்ட உடன்படிக்கை அமுலில் இருந்திருந்தால், சிங்களவர், தமிழர்கள் உட்பட இலங்கை மக்களுக்கு இப்படியான அழிவு ஏற்பட்டிருக்காது என நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலிகளின் தலைவருடன் தான் செய்து கொண்ட உடன்படிக்கை அமுலில் இருந்திருக்குமாயின், நாட்டு மக்களுக்கு அழிவுகள் ஏற்பட்டிருக்காது என ரணில் விக்ரமசிங்கவினால் கூற முடியாது என்றால், அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் விலக வேண்டும். அப்படி கூறாத ஒருவர் எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு தகுதியற்றவர்.

அரசாங்கம் நடத்துவது தேர்தல் அல்ல. கொள்ளையடிக்கும் தேர்தல். அரசாங்கம் சுவரொட்டிகளை ஒட்டுவதில்லை. கட்அவுட்களை வைக்கின்றது.

போரில் இறந்தவர்களை சிங்களவர்கள் நினைவுகூர முடிந்தது. தமிழர்களால் நினைவுகூர முடியவில்லை.

சிங்களவர்கள் ரோஹண விஜேவீரவை நினைவுகூரலாம், ஆனால் தமிழ் மக்கள் பிரபாகரனை நினைவுக் கூரக் கூடாது. இவற்றில் இருக்கும் நியாயம் என்ன? என விக்ரமபாகு கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

734


## ஏற்றத் தாழ்வுகள்



ஆரவல்லி மலையடிவாரத்தில ஞானவர்மர் ஒரு குருகுலம் நடத்தி வந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, அவர் யாத்திரை மேற்கொண்டு நாடெங்கிலும் உள்ள தன் பழைய மாணவர்களை சந்தித்துப் பேசி, அவர்களின் நலனையும், நாட்டு நடப்பையும் அறிந்து வருவார்.

ஒருமுறை அவர் அவ்வாறு செல்லும்போது, ஒரு கிராமத்தின் வழியே செல்ல நேர்ந்தது. கிராம எல்லையில் ஒரு மரத்தடியில் ஒரு சிறுவன் ஏதோ ஓலைச் சுவடிகளை கவனமாகப் படித்துக் கொண்டிருந்தது அவருடைய கவனத்தைக் கவரந்தது. மாடுகள் சுற்றிலும் மேய்ந்து கொண்டிருக்க, அப்போது அவனது தந்தை, "முத்து! இங்கே வா! வந்து கஞ்சி குடித்து விட்டுச் செல்!" என்றார்.

அப்போது, அவனைப் பின் தொடர்ந்து வந்த ஞானவரமரைக் கண்டு எழுந்து நின்று மரியாதை செலுத்திய முத்துவின் தந்தை, "ஐயா! நீங்கள் யார்? சிறிது கஞ்சி குடிக்கிறீர்களா?" என்று உபசரித்ததும், ஞானவர்மர், "வேண்டாம்! மாடு மேய்க்கும் உன் பிள்ளை ஓலைச்சுவடிகளைப் படித்துக் கொண்டிருந்தது எனக்கு பெரும் வியப்பை அளித்ததனால், அவனைப் பின் தொடர்ந்து வந்தேன்!" என்றார். தொடர்ந்து, "உன் பிள்ளைக்குப் படிப்பு நன்றாக வரும் என்று தோன்றுகிறதே! அவனை ஏன் மாடு மேய்க்க அனுப்புகிறாய்?" என்று கேட்டார்.



அதற்கு அச்சிறுவனின் தந்தை, "அவன் படிக்க வேண்டும் என்று நானும் ஆசைப்படுகிறேன. ஆனால், என் பிள்ளையை யார் தங்கள் குருகுலத்தில் சேர்த்துக் கொள்வார்கள்? எங்கள் குலத்தொழில் மாடு மேய்ப்பது என்று தெரிந்தால், யாரும் அவனைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்!" என்றான்.

"அவனை என் குருகுலத்தில் நான் சேர்த்துக் கொள்கிறேன். உடனே அவனை என்னுடன் அனுப்பு!" என்று ஞானவர்மர் உத்தரவிட, "சாமி!" என்று கூவிக் கொண்டே அவர் காலடிகளில் சிறுவனின் தந்தை விழுந்து வணங்கினான்.

ஞானவர்மர் உடனே முத்துவைத் தன்னோடு அழைத்துக் கொண்டு குருகுலம் திரும்பினார். அவர் எதிர்பார்த்தபடியே, முத்து மிக நன்றாகப் படித்தான். அவனுக்கு கணிதததிலும், பொருளாதாரத்திலும் மிகுந்த ஆர்வம இருந்தது. பத்து ஆண்டுகள் அவரிடம் பயின்றபின், முத்துவின் குருகுலவாசம் முடிவு பெற்றது.

அவனுக்கு விடை கொடுத்த ஞானவர்மர், "முத்து! உனக்கு இருக்கும் அறிவிற்கு நீ வியாபாரம் செய்தால் வாழ்வில் முன்னேற்றம் அடைவாய்! வியாபாரம் செய்ய புத்தியும், நல்ல உடல் உழைப்பும் தேவை! முயற்சி திருவினையாக்கும் என்பதைப் புரிந்துகொள! அயராத உடல் உழைப்பும், விடா முயற்சியும்தான், உனக்கு மிகவும் தேவை! போ! போய் வியாபாரம் செய்! இடையிடையே என்னை வந்து பார்!" என்று அவனை வாழ்த்தியனுப்பினார்......

(தொடரும்)

## 03.2014 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1562 - பிரான்சில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புரட்டஸ்தாந்தர்கள் கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்டதில் பிரான்சில் மதப் போர் ஆரம்பமானது.
- 1565 - ரியோ டி ஜனெய்ரோ நகரம் அமைக்கப்பட்டது.
- 1700 - சுவீடன் தனது புதிய நாட்காட்டியை அறிமுகப் படுத்தியது.
- 1811 - எகிப்திய மன்னன் முகமது அலி கடைசி மாம்லுக் அரச வம்சத்தவரைக் கொன்றான்.
- 1815 - இத்தாலியின் தீவான எல்பா தீவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் வாழ்ந்த நெப்போலியன் பொனபார்ட் பிரான்ஸ் திரும்பினான்.
- 1873 - முதலாவது பாவனைக்குகந்த முதலாவது தட்டச்சுப் பொறியை ஈ. ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.
- 1896 - ஹென்றி பெக்கெரல் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார்.
- 1899 - இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்ட விதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்தது.
- 1912 - முதன் முதலில் பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து ஆல்பேர்ட் பெரி என்பவர் பாரசூட்டில் இருந்து குதித்தார்.
- 1936 - ஹூவர் அணைக்கட்டு கட்டிமுடிக்கப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பல்கேரியா அச்சு நாடுகள் அணியில் இணைந்தது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிஸ்மார்க் கடல் போர் ஆரம்பமானது.
- 1949 - டச்சுக்களிடம் இருந்து யாக்யகர்த்தாவை இந்தோனேஷியா கைப்பற்றியது.
- 1953 - ஜோசப் ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நான்கு நாட்களின் பின்னர் அவர் இறந்தார்.
- 1954 - ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மாளிகை மீது புவேர்ட்டோ ரிக்கோ தேசியவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் காயமடைந்தனர்.
- 1966 - சோவியத்தின் வெனேரா 3 விண்கலம் வீனஸ கோளில் மோதியது. வேறொரு கோளில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1973 - சூடானில் சவுதி அரேபியாவின் தூதரகத்தை கறுப்பு செப்டம்பர் இயக்கத்தினர் தாக்கி மூன்று வெளிநாட்டு தூதுவர்களைப் பணயக்கைதிகளாக்கினர்.
- 1975 - ஆஸ்திரேலியாவில் வர்ணத் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1977 - சார்லி சப்ளினின் உடல் சுவிட்சர்லாந்தில் அவரது கல்லறையில் இருந்து திருடப்பட்டது.
- 1980 - சனி கோளின் ஜானுஸ் என்ற சந்திரன் இருப்பதை வோயேஜர் 1 விண்கலம் உறுதி செய்தது.
- 1981 - ஐரியக் குடியரசு இராணுவ உறுப்பினர் பொபி சான்ட்ஸ் வட அயர்லாந்து சிறையில் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.
- 1992 - பொசுனியா எர்செகோவினா யூகொஸ்லாவியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 2002 - ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2006 - ஆங்கில விக்கிப்பீடியாவில் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை எட்டியது.

### பிறப்புக்கள்

- 1647 - ஜான் டி பிரிட்டோ, போர்த்துக்கலைச் சேர்ந்த மதப்போதகர் (இ. 1693)
- 1910 - எம். கே. தியாகராஜ பாகவதர் தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (இ. 1959)
- 1910 - ஆர்ச்சர் மார்ட்டின், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2002)
- 1917 - கே. பி. சிவானந்தம், வீணை வாத்திய கலைஞர் (இ. 2003)
- 1922 - இட்சாக் ரபீன், இஸ்ரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1995)
- 1951 - நிதிஷ் குமார், இந்தியாவின் முன்னாள் அமைச்சர்
- 1953 - மு. க. ஸ்டாலின், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர்
- 1968 - குஞ்சராணி தேவி, இந்தியப் பளுதூக்கும் வீராங்கனை
- 1973 - கிரிஸ் வெபர், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

- 1911 - ஜேக்கபஸ் ஹொஃப், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1852)
- 1940 - அ. தா. பன்னீர்செல்வம், சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் (பி. 1888)
- 1995 - ஜோர்ஜஸ் கோஹ்லர், ஜேர்மானிய உயிரியலாளர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1946)

## எம்.கே.தியாகராஜ பாகவதர்



எம். கே. டி என அழைக்கப்படும் எம். கே. தியாகராஜ பாகவதர் இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள மாயவரத்தில் (தற்பொழுது மயிலாடுதுறை), விசுவகர்மா பொற்கொல்லர் குடும்பத்தில் 1910 மார்ச் மாதம் 1 ஆம் திகதி கிருஷ்ணமூர்த்தி - மாணிக்கத்தம்மாள் தம்பதியின் மகனாக பிறந்தார்.

சிறுவன் தியாகராஜனுக்குப் பள்ளிப்படிப்பில் நாட்டம் செல்லவில்லை. யார் பாடினாலும், இசைக் கச்சேரி எங்கு நடைபெற்றாலும் தியாகராஜன் அங்கே செல்வது மட்டுமல்ல, மறுபடியும் அந்தப் பாடல்களை ஒழுங்காகக் கேட்போர் வியக்கும் வகையில் பாடிக்காட்டுவாராம்.

இவர் தமிழ்த் திரைப்படத்துறையின் முதல் நட்சத்திர அந்தஸ்து பெற்ற உயர் நட்சத்திர கதாநாயகன் மற்றும் மிகச் சிறந்த கர்நாடக சங்கீத தமிழ் பாடகரும் ஆவார்.

1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்கிற திரைப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமான இவர் சுமார் 15 தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார். அதில் 6 படங்கள் மிகப்பெரிய வெற்றிப்படங்களாகும். 1944 இல் வெளியிடப்பட்ட இவரின் சாதனைப் படமான ஹரிதாஸ் 3 ஆண்டுகள் ஒரே திரையரங்கில் (சென்னை பிராட்வே திரையரங்கு) ஓடி 3 தீபாவளிகளைக் கண்ட ஒரே இந்தியத் திரைப்படம் என்ற சாதனையை அன்றைய காலகட்டத்தில் பெற்றது.

சென்னையில் (அன்றைய மதராஸ்) மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பாகவதர் மற்றும் அவரின் திரையுலக உற்ற தோழரான என். எஸ். கிருஷ்ணன் உடன் கைது செய்யப்பட்டு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். தண்டனைக் காலத்திலேயே இவரின் வழக்கு மறுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1948 இல் இருவரும் குற்றமற்றவர்கள் என இரண்டு ஆண்டு சிறைக்குப்பின் விடுவிக்கப்பட்டனர். இருப்பினும் சிறை விடுதலைக்குப்பின் அவர் நடித்த திரைப்படங்கள் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. அதில் நொடிந்துபோன பாகவதர் அதன்பின் திரைப்படங்களில் நடிக்க மனமில்லாமல் இருந்து வந்தார். நவம்பர் 1, 1959 இல் ஈரல் நோயினால் பாதிக்கப்பட்டு இளவயதிலேயே மரணமடைந்தார்.

தமிழ்த் திரை யுலகில் அவரைப்போல வாழ்ந்தவருமில்லை, அவரைப போல வீழ்ந்தவருமில்லை என்ற கருத்து அவருடைய ஆத்ம ரசிகர்களிடையேயும், திரையுலகிலும் நிலவுவது உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...பக்கத்தில் இரும்புக் கூண்டு ஒன்றில் தூண்டா விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது.


பருத்து நிமிர்ந்து வளர்ந்த பலா மரத்தினடியில் கோயில் கொண்டிருக்கும் கருப்பருக்கு மரத்தின் பாதியை தடுத்து மண்டபம் அமைத்திருக்கின்றனர். கூரைப் பகுதிக்கு மேலேதான் கிளைகள் செல்கின்றன. கூரைக்குக் கீழே பருத்த அடிமரம் கருப்பருக்குப் பாதுகாப்பாய் இருக்கிறது.

கருப்பருக்கு மேலே இருக்கும் அடி மரத்தின் இடுக்கில் ஒரே ஒரு காய் மட்டும் கருப்பரின் அருகே காய்த்துத் தொங்குகிறது. கருப்பருக்குப் பக்கத்தில் எப்போதும் பலாக்காய் ஒன்று காய்த்துத் தொங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது ஐதீகமாம்.

காய்த்துத் தொங்கிக் கொண்டிருக்கும் பலாக்காய் முற்றிவிழுந்துவிட்டால் மீண்டும் அதே இடத்தில் உடனே அடுத்து மற்றொரு காய் காய்க்குமாம். ஆக, எப்போதும் கருப்பருக்குப் பக்கத்தில் பலாக்காய் இருந்துகொண்டே இருக்குமாம். பல வருடங்களாக இந்த அதிசயம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது என்கிறார் இந்தக் கருப்பருக்குப் பூசை செய்யும் பூசாரி.

மலைக்கு மேலே செல்லும் போதும், சரி, கீழே இறங்கும் போதும்சரி, காவல், தெய்வமான இந்தக் கருப்பசாமியிடம் உத்தரவு வாங்கிக் கொண்டுதான் செல்ல வேண்டும் என்பது ஐதீகமாம்.

மலை ஏறும் போதும், இறங்கும் போதும் இவரை வணங்கி இவரது உத்தரவு பெற்று செல்லும் பக்தர்களுக்கு இவரது அருளாசியுடன் அவர்கள் பத்திரமாக மலையேறி கீழே இறங்குவதற்கு பாதுகாவலாக, தனது அம்சமான நாய் ஒன்றையும் துணைக்கு அனுப்புவாராம்.



கருப்பண்ணசாமி (பிலா மரத்தடி)

தாணிப்பாறை வழியின் ஆரம்பத்தில் இருக்கும் கருப்பர் மறந்தாலும் இந்தக் கருப்பர் மறவாமல் நமக்குத் துணைக்கு ஆள் அனுப்புவார் என்று அனுபவசாலிகள் கூறுகின்றனர்.

எப்படியோ மகாலிங்கரைத் தரிசிக்க நமக்குக் கருப்பர் வழித்துணைக்கு வருகிறாரே, அந்த வரைக்கும் அவர் கருணைக்கு நாம் நன்றி சொல்வது அவசியம்.

கருப்பருக்கு மிகவும் பிடிக்கும் என்பதற்காக இங்கு சாராயமும் சுருட்டும் வைத்து வழிபட்டுவிட்டு மலையேறும் பக்தர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மலையேறி மகாலிங்கத்தைத் தரிசித்து விட்டுத் திரும்பும் போது காணிக்கையாய் வைத்த சாராயமும், சுருட்

## ஆன்மீகம் 48

டும் காணாமல் போயிருக்குமாம். கருப்பர் காணிக்கையை ஏற்றுக் கொண்டதற்கான அறிகுறியாம் அது.

இது இன்னும் சற்று அதிகமாய்ப் போய் இங்கு கோழி, ஆடு பலியெல்லாம் கூட கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்திலேயே இதனைத் தடுத்தால் உயிர்பலி காணிக்கை தவிர்க்கப்படும். கருப்பர்தான் கருணை காட்ட வேண்டும்.

பலாவடிக் கருப்பண்ணசாமி கோயிலின் சித்த ரகசியங்களில் ஒன்று இங்கிருக்கும் தைலக்கிணறு பற்றியது. அதனை கோரக்கர் சித்தர், கானாற்றுக்கு தென்பக்கமாய் பலா மரமும் கருப்பண்ண சுவாமி கோயிலும் இருக்கின்றன. அந்தக் கருப்பண்ண சுவாமிக்குப் பின்பக்கம் காலாங்கி முனிவர் வைத்த தைலக்கிணறுக்குக் கற்கதவு போட்டு மூடி அதன்மேல் பாறைக் கல்லைத் தூக்கி வைத்திருக்கிறது.

அந்தத் தைலத்தை எடுக்க வேண்டுமானால் காவல் இருக்கும் பலாவடிக் கருப்பனுடைய உத்தரவின் பேரில் எடுக்கலாம். (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



எம்.ஜி.ஆரின் அன்னை சத்தியபாமா

60

"நமது சொல்லுக்கும் செயலுக்கும் மத்தவங்க விமர்சனம் சொல்ற அளவுக்கு வச்சுக்கக் கூடாது. எம்.ஜி.ஆர் எப்படி இருந்தாரோ அப்படியே இருந்து வாழ்ந்துட்டுப் போய்ட்டாருன்னோ, ஆண்டுட்டுப் போய்ட்டாருன்னோ சொல்லணும்கிறது தான்" என் ஆசை என்றார் செம்மல்.

செம்மலைத் தேடி நாளுக்கு நாள், வருவோர் போவோர் எண்ணிக்கை அதிகம் ஆனது. இட நெருக்கடி இருந்தது. நிறைய பரிசுப் பொருட்கள் மர அலுமாரிகளில் அழகாக வைக்கப்பட்டிருந்தன. அதையெல்லாம் நகர்த்தி அங்கு இருக்கைகள் போடப்பட்டன. அந்த சுழற்கோப்பை மட்டும் அறிஞர் அண்ணா படத்துக்குக் கீழேயே இருந்தது. ஒரு நாள் அதைத் துடைத்து வைக்க மெடல் பாலிஷ் போட நகர்த்தினர். அதன் மூடியைத் திறந்த போது அதற்குள் நிறைய தூசி இருந்தது. அதனுள் கொஞ்சம் நெல்லும் இருந்தது. அதை எடுக்கப் போகையில் செம்மல் "தூசிகளை அகற்றுங்கள். நெல்லை விட்டுடுங்க" என்றார். துடைத்து பளபளப்பாக்கி நெல்லை அதனுள் போட்டு அங்கேயே வைத்து விட்டனர். அந்த நெல் அதற்குள் இருந்த காரணம், அப்போது தெரியவில்லை.

மத்திய அரசு செம்மலின் ஆட்சியைப் பறித்தது.

மக்களுக்கு இதைச் சொல்ல இதோ என் பதில், என்று ஒரு கதை எழுதச் சொன்னார். அதில் [illegible] கம் வேண்டும் [illegible] பாரிவள்ளலின் ஒரு பாடலை காட்சியாக்கிக் கொடுத்தேன்.



தன் அன்னையை வணங்கும் எம்.ஜி.ஆர்

"பறம்பு மலையை மூவேந்தர் முற்றுகையிட்டபோது பஞ்சம் தாண்டவமாடியது. அப்போது பாரியின் இரு மகள்களான அங்கவையும் சங்கவையும் தாங்கள் வளர்த்த கிளிகளை அனுப்பினார்கள். அவை பறந்து சென்று மலைக்குக் கீழே வளர்ந்து தலை சாய்ந்திருந்த கதிர்களை தம் அலகால் சுமந்து வந்தன. அதனைச் சமைத்து பாரியின் குடும்பம் உண்டது"

இதை எழுதிக் கொடுத்த போது செம்மல் ரசித்தார். ஏதோ சிந்தித்தார். இது நடந்ததா எனக் கேட்க, இதற்காக உள்ள அகநாநூறு பாடலைக் காட்டினேன். எப்போாதும் போல் ஒரு மோனலிசா சிரிப்பு.

"நல்லா இருக்கு! ரவீந்திரன்.... இப்படி ஒரு சமயம் என் அம்மா வாழ்க்கையிலும் நடந்தது. அப்போது நாங்க சிலோனை விட்டு வந்த சமயம். என் மாமாவி[illegible]யும் இழந்து ரொம்ப [illegible] இருந்தோம். அது குடிசை. மண் தரை. எறும்பு புத்துக்கள் அதிகம். ஒரு நாள் சோற்றுக்கு வழியில்லை. அப்ப எனக்கு வயது ஆறு இருக்கும். அம்மா எது எதையோ தடவிப் பாத்தாங்க. அப்ப எறும்பு புத்தை தோண்டினாங்க. அதுக்குள்ள இருந்த அரிசியை எடுத்தாங்க!

"இரு... கஞ்சி காச்சி தரேன்" என்றார்.

எனக்குக் கருத்து தெரியாத காலம். எங்க பக்கத்திலே பத்தாயங்க இருக்கும். அதிலே நெல்லு, அரிசி போட்டு வச்சு எடுப்பாங்க. அதைப் பார்த்திருக்கிறேன்.

"அடுத்தடுத்த வீடுங்கள்ளே பத்தாயத்துலேதான் அரிசி எடுப்பாங்க. நீ ஏம்மா தரையைத் தோண்டி எடுக்கிறே?" என்று கேட்டேன்.

தாய் என்னை அணைத்து, அழுது, இல்லாத நிலையைச் சொன்னாங்க. அண்ணன் ஸ்கூல் போயிருந்தார். அப்ப நான் வீராவேசமா "கவலைப் படாதேம்மா. மரப்பத்தாயம் இல்லேன்னா, உனக்கு வெள்ளிப் பத்தாயம் செஞ்சு தாரேன்" என்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை புதைகுழி எலும்புக்கூடுகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும்

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தின் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரியை இரசாயனப் பகுப்பாய்வுக்குட்படுத்தும் வகையில் அவற்றை அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் அமைந்துள்ள பீட்டா எனலிடிக் ஆய்வகத்துக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி எலும்புக் கூடுகளை அமெரிக்க ஆய்வகத்தின் இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பணிப்புரை விடுத்திருப்பதாக மாத்தளை மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் விசாரணை மேற் கொண்டு வரும் ஜனாதிபதி விசாரணைக் குழுவின் தலைவரும், முன்னாள் நீதியரசருமான எஸ்.ஐ. இமாம் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மனிதப் புதைகுழி யில் மீட்கப்பட்ட மனித எச்சங்களை சீனாவின் பீஜிங்கிலுள்ள பீஜிங் பல்கலைக்கழக இரசாயனப் பகுப்பாய்வு மையத்துக்கு அனுப்பி வைப்பதற்கே முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும் மேற்படி ஆய்வகத்தில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகள் காரணமாகவே தற்போது அமெரிக்க ஆய்வகத்தை தெரிவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்லே கொட ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.எல்.பி.கே. அத்தபத்து மற்றும் விசாரணைக் குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எஸ்.ஐ. இமாம் ஆகியோர் தலைமையில் கடந்த 25 , 26 ஆம் திகதிகளில் விசாரணைகள் இடம்பெற்றன.

மாத்தளை செயலகத்தில் இடம் பெற்ற இவ் விசாரணைகளின் போது, 66 பேரிடம் விசாரணைகள் நடத்தி வாக்கு மூலங்களும் பதிவு செய்யப் பட்டன.

மாத்தளை மாவட்ட முன்னாள் சட்ட வைத்திய நிபுணர் அஜித் ஜயசேன மேற்படி வாக்கு மூலங்களைப் பதிவு செய்தார்.

இதன் முடிவிலேயே விசாரணைக் குழுவின் தலைவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். (அ-2)

# அமெரிக்காவின் யோசனைக்கு பிரிட்டன் இணை அனுசரணை

அமெரிக்கா இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஜெனீவாவில் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணைக்கு தாம் இணை அனுசரணை வழங்குவதை பிரித்தானியா உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் பிரேரணையில் இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக அந்த நாட்டின் வெளியுறவு மற்றும் இராஜாங்க திணைக்கள சிரேஷ்ட அமைச்சர் பாரோனெஸ் வர்ஸி தெரிவித்துள்ளார்.

பிரபுக்கள் சபையில் வைத்து நேற்றுமுன்தினம் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே 2012, 2013ஆம் ஆண்டுகளிலும் பிரித்தானியா இலங்கைக்கு எதிரான யோசனைக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தமையை வர்ஸி சுட்டிக்காட்டினார்.

தற்போதும் இலங்கை தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் நியாயமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என்றும் வர்ஸி குறிப்பிட்டார். (அ-2)

# இராணுவ கோப்ரலுக்கு 40 வருட கடூழியசிறை

சிறுமி ஒருவரை பாலியல்வன் புணர்வுக்கு உட்படுத்திய இராணுவ கோப்ரல் ஒருவருக்கு 40 வருட கடூழிய சிறைத்தண்டனையை அநுராதபுரம் விசேட மேல் நீதி மன்றம் வழங்கியுள்ளது.

வழக்கு விசாரணையின் போது குற்றவாளியாக இனங்காணப்பட்ட குறித்த இராணுவ கோப்ரல், பாதிக்கப் பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈட்டை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் குறித்த இராணுவ கோப்ரல், குறித்த சிறுமியை இரண்டு முறை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாக சட்டமாதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, இரண்டு குற்றச் செயல்களுக்குமாக தனித்தனியாக 20 வருடங்கள் வீதம் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சாதகமான பதில் இதுவரை இல்லை

இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்தலாம் என அறிவித்துள்ள போதும் தமிழக அரசு இதுவரை சாதகமான பதில் எதனையும் அறிவிக்க வில்லை என கடற்றொழில் அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக தமிழக அரசுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதும் தமிழக அரசு இதுவரை எந்த வொரு பதிலையும் எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என கடற்றொழில் திணைக்கள பணிப்பாளரும் பேச்சுவார்த்தை குழுவின் அங்கத்தவருமான நிமால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ-2)


# கைவினை பணியாளர்களுக்கு தேசிய விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் தேசிய அருங்கலைகள் பேரவையும் இணைந்து அதிசிறந்த கைவினை கைப்பணியாளர்களை தேசிய ரீதியில் இனங்கண்டு அவர்களின் படைப்புக்களையும் வடிவமைப்புக்களையும் கௌரவித்து தேசிய ரீதியில் அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குகின்ற நிகழ்வான **"கைவினை கைப் பணியாளர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவமானது"** கடந்த 25 ஆம் திகதி பண்டார நாயக்கசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வானது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைசசர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

தாய்நாட்டின் கைவினை கைப் பணியாளர்களை தேசிய மட்டத்தில் கௌரவிக்கும் இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த நிகழ்விற்கு **ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக்** கலந்து கொண்டதுடன் அதிசிறந்த வடிவமைப்புகளுடன் கூடிய படைப்புக்களை



உருவாக்கிய கைவினை கைப் பணியாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

• **334 கைவினைக் கைப்பணியாளர்கள் கௌரவிப்பு**

கைவினை கைப்பணியாளர்களுக்கான விருது வழங்கும் வைபவத்தில் அதிசிறந்த வடிவமைப்புக் களையும் படைப்புக்களையும் வெளிக் கொணர்ந்த தாய்நாட்டின் 334 கைவினை கைப்பணியாளர்கள் 9 மாகாணங்களையும் பிரதிபலிக்கும் வகையில் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்படி:

தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய கைவினை கைப்பணியாளர்கள்

2 பேர் - தங்கப்பதக்கங்களையும்
13 பேர் - வெள்ளிப்பதக்கங்களையும்
37 பேர் - முதலாம் இடத்தையும்
39 பேர் - இரண்டாம் இடத்தையும்
47 பேர் - மூன்றாம் இடத்தையும்
196பேர் - சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கைவினை கைப்பணியாளர்கள் மாகாண மட்டத்தில் விருதுகளை பெறுவதுடன் அவர்களில் தெரிவு செய்யப்பட்ட மிகச் சிறந்த படைப்புக்களை வெளிக்கொண்டு வரும் 300இற்கும் மேற்பட்ட கைவினை கைப்பணியாளர்கள் வருடாந்தம் தேசிய மட்டத் தல் கௌரவிக்கப்பட்டு விருதுகளைப் பெறுகின்றனர். இது இளைய தலைமுறையினரை ஊக்கு விக்கும் ஒரு செயற்பாடு ஆகும்.


இந்திய அரசின் சிறிய நன்கொடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு கைவினை கைப்பணி உற்பத்தி விற்பனை கிராமங்கள் காவன்திஸ்ஸபுர- அம்பாந்தோட்டையிலும் கைதடி, யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதில் உற்பத்திகள் மற்றும் உற்பத்தி செய்முறைகள் வெளிக் கொணரப்படுவதுடன், இடைத்தரகர்களின் தலையீடுகள் இன்றி உற்பத் தியாளர்கள் தமது கைவினை கைப் பணி பொருட்களை நுகர்வோரிற்கு காட்சிப்படுத்தி நேரடியாக விற்பனை செய்யமுடியும்.

ஜனாதிபதியினால் 2014ஆம ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் நிதி திட்டமிடல் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் பெண் முயற்சியாளர்களுக்கு வட்டியற்ற, பிணையற்ற மென் கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைவினை கைப்பணியாளர்களுக்கு சுழற்சி முறை நிதி வழங்கல் கடன்திட்டத்தின் கீழ் தொழிற்பாடு மூலதனத்திற்கு தேவையான நிதியினை வட்டியற்ற, பிணையற்ற, மென்கடன்களாக, உறுதிப்படுத்தப் பட்ட கொள்வனவு கட்டளைகளின் அடிப்படையில் வழங்கு வதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சானது ஐந்து ஆண்டு மூலோபாயத் திட்டத்தை தயாரித்துள்ளதுடன் இது மஹிந்த சிந்தனை எதிர்கால தொலை நோக்கு- தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவானதாக உள்ளதுடன், அதனடிப்படையில் கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கைவினை கைப்பணித்துறையினை பொருளாதாரத்தின் ஓர் சக்தி மக்க துறையாக மாற்றுவதன் மூலம் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றுகின்ற இலக்கிற்கு — பங்களிப்பினை வழங்குகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



பன்னாலை சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் ஆலயத்தின் மகாசிவராத்திரி தினத் தன்று அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தின் சிறப்புப்பட்டிமன்ற நிகழ்வு இடம் பெற்றதை படத்தில் காணலாம். (படம்:- மல்லாகம் செய்தியாளர்)

# ஜனாதிபதியின் வைத்தியரின் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு

ஜனாதிபதியின் வைத்தியர் எலியந்த வைற்றின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மிரிஹான பிரதேசத்தில் வைதது எலியந்த வைற்றின் உத்தியோக பூர்வ வாகனம் மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட போது வைத்தியர் காரில் பயணம் செய்ய வில்லை. அவரது சாரதி வைத்தியரின் தாயாரது வீட்டுக்கு பயணம் செய்து திரும்பிய போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்தில் சாரதிக்கும் காயங்கள் எதுவும் ஏற்பட வில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சம்பவம் தொடர் பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் சிறுவர்களின் இன்னல் சொல்லும் 'இனம்'



இயக்குநர் சந்தோஷ் சிவன்

""உலகம் முழுக்க நண்பர்கள்... பல நாடுகளில் அலுவலகங்கள்... இந்தியனாக இருந்தாலும் ஏதோ எல்லைகளே இல்லாதவன் மாதிரி சுற்றிக்கொண்டே இருக்கிறேன். உண் மைமெய்ச் சொல்ல வேண்டும் என்றால் இது எனக்கான பெருமை இல்லை சினிமா என்ற கலைக்கான பெருமை!"

உலகம் அறிந்த இந்திய ஒளிப்பதிவாளர். 11 தேசிய விருதுகள் பெற்றவர். ஒஸ்கார் விருதுகளைத் தேர்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் "அமெரிக்கன் சொஸைட்டி ஒஃப் சினிமாட்டோகிராபர்ஸ்' அமைப்பின் உறுப்பினர்... என ஒவ்வோர் அடையாளத்திலும் கண்ணிய அங்கீகாரம் சேர்த்திருபபவர்.

சாகச வித்தைகளுக்கு கொமர்ஷியல் சினிமா, ரசனைப் பதிவுகளுக்கு கிளாசிக் சினிமா என இயங்குபவர், இப்போது "இனம்' என்ற படத்தை இயக்கியிருக்கிறார். ஈழப் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின்மனநிலையை விபரிக்கும் படத்தின் டீஸர் அதிரடிக்கிறது!

**கேள்வி: "ஒரு போர் முடிந்த தும் அது தொடர்பான பதிவுகள், படங்கள் வருவதை உலகம் நெகிழ்வோடு வரவேற்கும். உங் களுக்கு எப்படி இந்த யோசனை வந்தது?"**

**பதில்:** "என் நண்பர் ஒருவரைச் சந்திக்கப் போயிருந்தேன். அந்த வீட்டில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் கண்ணில் அவ்வளவு சோகம். "யார் என்று விசாரித்தேன். அவள் போரில் தன் குடும்பத் தைப் பறிகொடுத்தவள். அவள் சொன்ன கதை என்னை உலுக்கி விட்டது. ஒரு போர் எப்படியெல்லாம் ஒரு குடும்பத்தைச் சிதைக்கும் என்று தெரிந்து அதிர்ச்சி அடைந்தேன் அப்போது வந்த எண் ணம்தான் "இனம்!"

**கேள்வி:"ஏற்கெனவே ஈழம் தொடர்பான சரியான புரிதல் இல்லாமல் எடுத்த இந்திப் படம் இங்கே பிரச்சினைகளை சந்தித்ததே?"**

**பதில்:**"இனம்' எந்த அரசியலையும் முன்வைக்காது. போரினால் பெற்றோர்களை, உறவினர்களை இழந்து அநாதையான குழந்தைகள் பற்றி மட்டுமே பேசும் படம் இது. இந்தப் படம் முடியும்போது சில கேள்விகள் உங்கள் மனதில் அலையடிக்கும். அதற்குப் பதில்களும் கிடைக்கலாம். அப்படி உங்களுக்குப் பதில் கிடைத்தால்அதுதான் படத்துக்கான வெற்றி. இது இலங்கையில் நடக் கும் கதை. ஆனால், உலகம் முழுக்கப் போரால் பாதிக்கப்படும் எல்லாக் குழந்தைகளின் கதைகளை யும் பேசும் படம் இது!"

**கேள்வி:"இந்தப் படத்தை ஷூட் பண்ண இலங்கையில் அனுமதி கிடைத்ததா?"**

**பதில்:**"இலங்கையில் நடக்கிற கதை. அதை இலங்கையிலேயே எடுத்திருக்கலாம். ஆனால், "இப்படித்தான்எடுக்க வேண்டும் என ஏதும் முட்டுக்கட்டைகள் வரலாம். அதனால் ஈழத்தை அப்படியே இங்கே க்ரியேட் பண்ணி விட்டோம். கொஞ்சம் இராமேஸ்வரத்திலும் ஷூட் பண்ணியிருக்கோம். நடிகை சரிதா "சுனாமியக்கா என்கிற கரக் டரில் நடித்திருக்கிறார். சுனாமியில் மொத்தக்குடும்பமேசாக, இவர் மட்டுமே தப்பியிருப்பார். "இவ்வளவு பேர் இறந்த பின்னர், நான் மட்டும் உயிரோடு இருக்கிறேன்... ஏதோ நல்லதுக்குத் தான் என்று நினை த்து ஒரு காப்பகத்தை நடத்திக் கொண்டு இருப்பார்.

போரில் உறவினர்களை இழந்த குழந்தைகள், அங்கே அடைக்கலம் தேடி வருவார்கள். அதை "காப்பகம் என்று சொல்வதைவிட ஒரு "குடும்பம் என்று சொல்லலாம். இந்தச் சூழலில் இறுதி யுத்தம் வருகிறது. அவர்கள் வாழ்க்கை என்ன ஆகிறது என்பது கதை. இந்தக் கதை தமிழ் இனம் உணர வேண்டிய ரணம்!"

**கேள்வி:"யார் எல்லாம் நடிச்சிருக்காங்க?"**

**பதில்:**"கேரளாவில் எனக்கு டாக்டர் ஃப்ரெண்ட் ஒருத்தர் இருக்கிறார். அவருடைய குழந்தை ஸ்பெஷல் சைல்டு. டவுண் சிண்ட்ரோமால் பாதிக்கப்பட்டவன். அவனை நான் ஷூட்டிங் பண்ண வேண்டும் என்ற நீண்ட நாளாக சொல்லிக் கொண்டு இருந்தார். ஒருநாள் நேரம் கிடைத்த போது, அவனை ஷூட் பண்ணப் போனேன். அந்தக் குழந்தையின் உலகமே வேறு. அவனுடைய உலகத்துக்குள் போய் அவனுடைய நண்பனாக நின்று, நான் ஷூட்டிங் பண்ணிய போது "இதுவரை பண் ணியதிலேயே இதுதான் எங்களுடைய பெஸ்ட் வொர்க் என்று தோன்றியது.

"இனம்' கதைக்கு அப்படி ஒரு ஸ்பெஷல் சைல்டு கரக்டர் தேவைப்பட்ட போது, எனக்கு அறிமுகம் ஆனான் கரண். 16 வயதுப் பையன். ஒன்பது மாதம் அவனுக்கு நடிக்கப் பயிற்சி கொடுத்தோம். அவனைத் தவிர முகாமில் உள்ள நிஜ அகதிகளும் நடித்திருக்கிறார்கள்!"

**கேள்வி:"இந்தப் படத்துக்கு, உலகத் திரைப்பட விழாக்களில் என்ன வரவேற்பு?"**

**பதில்:**"பாடல்கள் உள்ள இந்தியன் வெள்ளை புகானில் திரையிட்டோம் நல்ல வரவேற்பு. அடுத்து நோர்வே போகிறது. உலகத் திரைப்பட விழா என்றதும் படம் ஏதோ டொக்கு மென்டரி ஃபீல்லில் இருக்கும் என்று நினைக்காதீர்கள். கமர்ஷியலான படம். நான் ஒளிப்பதிவு செய்த "அஞ்சான்' படத்துடைய டைரக்டர் லிங்குசாமி இந்தப் படம் பார்த்ததும் "நானே ரிலீஸ் செய்கிறேன் என்று சொல்லியிருக்கார்!"

**கேள்வி:"தளபதி படத்துக்கு முன்னாலேயே இங்கு வந்து விட்டீர்கள். ஆனால், தமிழ் பேச இவ்வளவு திணறுகிறீர்களே.. தமிழ் கற்றுக் கொள்ள ஆர்வம் இல்லையா?"**

> **"போரினால் பாதிக்கப்பட்ட ஈழச் சிறுவர்களின் மனநிலையினை வெளிக்கொணரும் வகையில் உருவாகி வரும் *இனம* திரைப்பட இயக்குநரின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது."**

**பதில்:**"வேலை காரணமாக அதிகமாக இங்கிலீஷ்தான் பேசுகிறேன். மணிர த்னம் குழு உட்பட நான் வேலை செய்கிற குழு எல்லாமே அப் படியே அமைந்திருந்தது. பின்னர் எப்படி தமிழ் கற்றுக்கொள்ள முடியும்? இப்பொழுதான் லிங்கு சாமி குழுவில் தமிழ் பேசக் கற்றுக் கொண் டிருக்கிறேன். அடுத்து எங்களுடைய கூட்டத்தில் நன்றாக தமிழ் பேச முயற்சி செய்கிறேன். கிராமத்துக்குப் போகும் போது இன்னும் நன்றாக பேசு வேன் என்று நினைக்கிறேன்."

**கேள்வி:"யாரிடமும் நீங்கள் உதவியாளராக இருந்தது இல்லை. இவ்வ ளவு பெரிய உயரம் எப்படிச் சாத்தியம்?"**

**பதில்:**"புனே ஃபிலிம் இன்ஸ்டிரியூட்டில் படித்தேன். "யாரிடமாவது உதவியாளராக இருக்க வேண்டும், இல்லை என்றால் வேலையே கிடைக்காது என்று சொன்னார்கள். யாரிடமாவது உதவியாளராக சேர எனக்கு விருப்பம் இல்லை. சில நாட்கள் ஸ்டில் போட்டோ கிராபி செய்து கொண்டு இருந்தேன்.

ஒருமுறை அருணாசலப் பிரதேசத்தில் உள்ள ஒரு ஸ்கூலுக்கு போட்டோகிராபி டிரெய்னிங் தரப் போயிருந்தேன். காட்டுக்கு நடுவில் தான் அந்த ஸ்கூல் இருக்கு. பிள்ளைகள் எல்லோரும் புத்தகத்தோடு கையில் கத்தியும் வைத்திருந்தார்கள். "படிக்கும் பிள்ளைகள் கையில் கத்தியா? என்று விசாரித்தால், "இங்கே அடிக்கடி புலிகள் நடமாடும். புலி வந்தால் எல்லோரும் ஓடி விடுவோம். இல்லை என்றால் மரத்தில் ஏறி வடுவோம். முடியாவிட்டால் அதை பயமுறுத்தத் தான் கத்தி என்று பதில் சொன்னார்கள். எனக்குப் பதற்றம் ஆகிவிட்டது. "எனக்கு ஓடவோ, மரம் ஏறவோ தெரியாதே... புலி வந்தால் என்னசெய்வது என்று கேட்டேன். "பிரச்சினையே இல்லை. புலியை நேரில் பார்த்தால் எல்லாவற்றையும் நீங்களே கற்றுக் கொள்வீர்கள் என்று சிரித்துக்கொண்டே சொன்னார் ஒருத்தர். அவ்வளவு தான் வாழ்க்கை. வளர வேண்டும் என்றால் சவாலைச் சந்திக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும் என்று தோன்றியது. நேரடியாகக் களத்தில் இறங்கி விட்டேன்!"



ஆனந்த விகடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை பெரிய தப்பு....!



## அற்புதம்மாளின் நேர்காணல்

**...வேலூர் சிறையிலேருந்து செம்ரெம்பர் 9 ஆம் திகதி தூக்கிலிடப்படும் உங்கள் மகனின் சவத்தை நீங்கள் பெற்றுச் செல்ல வேண்டும்னு அனுப்பப்பட்ட கடிதம்.** ஒரு தாயா என் நெலமையை அன்



னைக்கு நீங்க யோசித்துப் பாருங்க... நான் சந்திச்ச அதிர்ச்சிக்கெல்லாம் நான் எப்பவோ செத்திருக்கணும்.

வீட்டில ஏற்கனவே உடம்பும் நைஞ்சு மனசும் நைஞ்சுபோய் உக்காந்துருக்குற அப்பா. இதுல அம்மா நானும் போய்ட்டா என் பிள்ளையோட நிலைமை என்னவாகும்? இந்த ஒரே கேள்வியும் வைராக்கியமும்தான் இன்னும் என்னை உசிரோட வச்சிருக்கு.

**பேரறிவாளன் விடுதலைக்கான இந்தப்போராட்டத்துக்கு இடையிலேயே சிறைச்சூழல் மாற்றத்துக்காகவும் போராடினீர்கள் அல்லவா?**


ஆமாம். வெளியிலேந்து பாக்குறமாதிரி நம்ம விசாரணை அமைப்புகளும் சிறைகளும் அவ்வளவு சாதாரணமான இடம் இல்லப்பா. அதிகாலையிலேயே புறப்பட்டு பல பஸ்ஸு மாறி நாள் முழுக்க கொதிக்கிற வெயில்ல காத்திருப்பேன். எதுக்கு? அஞ்சு நிமிஷம் புள்ள முகத்தைப் பாக்குறதுக்கு. ஈவிரக்கமே இல்லாம துரத்தியடிச்சுடுவாங்க.

ஆரம்பக்கட்டத்துல மல்லிகைக்கு அறிவைப் பார்க்கப்போனப்ப நடந்த சம்பவம் இது. பல நாள் காத்திருந்து அஞ்சு நிமிஷ அனுமதி வாங்குறேன். வயித்துக்கோளாறு. கூட இருந்த பெண் காவலர்கிட்ட சொன்னப்போவேண்டா வெறுப்பா பக்கத்துல இருந்த ஒரு கழிப்பறையைக் காட்டினாங்க. கதைவைச் சாத்தப்போறன் தடுத்துட்டு தொறந்து வச்சுக்கிட்டே போன்னு சொன்னாங்க. அப்படியேதான் போனன், கூனிக்குறுகி. வெளியிலயிருந்து போற நமக்கே இந்த நெலமைன்னா உள்ளே இருக்குறவங்க நிலைமை எப்படியிருக்கும். அறிவு எவ்வளவே சித்திரவதைகளையும் அவமானங்களையும் தாங்கியிருக்கான்.

தனிமைச்சிறையில ஒரு சின்னக் கொட்டடியில இருக்குற அவனுக்கு எதைத் துணையாய்க் கொடுக்க முடியும்? அவன் கேட்குற பத்திரிகைகள், புத்தகங்களையெல்லாம் வாங்கி சுமந்துக்கிட்டுப்போவேன். அரிதாக் கிடைக்கிற அஞ்சு நிமிஷ சந்திப்பும் எப்படியிருக்கும்னு நெனைக்கிறீங்க? ஒவ்வொரு சிறையிலேயும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். ஒரு சிறையில குறுக்கே கண்ணாடிச் சுவர் இருக்கும். எதுவும் பேசமுடியாது. கேட்காது. எல்லாம் சைகைதான். இன்னொரு சிறையில ரெண்டடி இடைவெளியில ரெண்டு கம்பித் தடுப்பு இருக்கும். ரெண்டு பக்கமும் எல்லோரும் கத்துற கத்துல யாருக்கும் எதுவும் கேட்காது. இதையெல்லாம் எதிர்த்து நீதிமன்றத்துக்குப் போனேன். இன்னைக்கு கொஞ்சமாச்சும் அது மாற்றத்தைக் கொண்டாந்திருக்கு.

தொடக்கத்தில் எல்லோருமே உங்களை விட்டு ஒதுங்கியிருப்பார்கள் இல்லையா?

நிறையப்பேர் ஒதுங்கிட்டாங்க. ஆனா, சில நல்ல மனுசங்க அப்போதான் கைகோத்தாங்க. என்னோட பெரிய பொண்ணைப் பார்த்திட்டுப் போயிருந்தாங்கின்னு சொன்னேன் இல்லையா அந்தச் சம்பந்தம் தட்டிப்போகலை. பேருக்கு ஏத்த மாதிரியே



அமைஞ்ச மாப்பிள்ளை ராஜா வழக்கெல்லாம் கிடக்குதுன்னு சொல்லி என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்.

அறிவு விடுதலைக்காக ரொம்ப நாள் திருமணம் பண்ணிக்க மாட்டேன்னு காத்திருந்த ரெண்டாவது பொண்ணுக்கும் மாப்பிள்ளை தன சேகரன் அப்படித்தான் தேடிவந்தார்.

இன்னைய வரைக்கும் வழக்குக்காக ஏற்படுற பெருஞ்செலவை மகள்களும் மாப்பிளைகளும்தான் பகிர்ந்துக்கிறாங்க.

**ஏன் அரசியல் கட்சிகள் பகிர்ந்து கொள்ளவில்லையா?**

சில விஷயங்களையெல்லாம் பேசவேணாம்னு நினைக்கிறேன்பா. அவ்வளவு துரோகங்கள் அறிவு கதையில. ரெண்டு உதாரணங்களை மட்டும் செல்றேன். எந்த இயக்கத்தை எங்க உயிரா நினைச்சோமோ அந்த தி.மு.க. என்ன பண்ணிச்சு தெரியுமா? அறிவு கைது செய்யப்பட்டவுடனே இயக்கத்துக்கும் அறிவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லைன்னு அறிவிச்சுச்சு.

சீக்கிரமே பகுத்தறிவுக்கழக மாவட்டப் பொறுப்பாளரா இருந்த என்னோட கணவர் குயில்தாசனையும் ஒதுக்குச்சு. அவசர நிலை காலகட்டத்துல கலைஞர் அரசு கவிழ்க்கப்பட்டப்போ எதிர்த்துப்போராட நிதி வசூலிச்சுக்கிட்டு ஊரையே திரட்டிக்கிட்டுப்போய் தலைவா நாங்க இருக்கோம் உங்கூடன்னு நின்ன குடும்பம் எங்களோடது. ஆனா அறிவு கைது செய்யப்பட்ட பின்னாடி இந்த 23 வருசத்துல ஒரு முறைகூட அவரைச் சந்திக்கமுடியலை.




இதையெல்லாம் குற்றச்சாட்டாச் சொல்லலை. வேதனையாத்தான் சொல்றன். இப்படி எவ்வளவோ கதைகளைச் சொல்லலாம். ஆனாலும் நெடுமாறன், நல்லகண்ணு, தியாகு, வைகோ, சீமான் இவங்கல்லாம் பெரிய அதரவைத் தந்திருக்காங்க. எல்லாத்துக்கும் மேல இப்போ முதல்வரம்மா என் பிள்ளைய மீட்டுத்தாறேன்னு சொல்லிட்டாங்களே...

**முதல்வரிடம் என்ன பேசினீர்கள்? ஏனையோர் இதைத் தேர்தல் நாடகமென்றெல்லாம் விமர்சிக்கிறார்களே?**

அவங்க கூப்பிடலை நானாத்தான் ஓடினேன். நன்றி சொல்லுறதுக்காக அவங்களைப் பார்த்தப்போ அழுகையைத்தாண்டி எதுவும் வரலை. இவ்ளோ சந்தோஷத்தையும் என்னால தாங்கிக்க முடியலைன்னு கதறினேன். இனிநீங்க அழக்கூடாது. உங்க மகன் சீக்கிரமே வந்துடுவார்னாங்க. விமர்சிக்கிற வாய்கள் இத்தனை நாள் என்ன பேசுச்சு? என்ன செஞ்சுச்சுன்னு? ஊருக்குத் தெரியும்.

முதல்வர் முடிவுக்கு பிரதமர் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். மத்திய அரசின் எதிர்ப்பால் உச்ச

> ராஜீவ் காந்தியோட அந்த சாவுதான் எங்களோட வாழ்க்கையையும் சூறையாடப் போவுதுன்னுஅப்ப தெரியல்ல........

நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது... என்ன வேணா நடக்கட்டும். முதல்வர் அம்மா சொல்லிட்டாங்க. இனி என் புள்ள வெளியே வர்றதை யாராலும் தடுக்க முடியாது.

**சரி பிள்ளை வந்திடுவார். அடுத்து என்ன?**

அவனைப்பத்தி ஆயிரம் கனவு இருக்கப்பா. ஆனா அதையெல்லாம் தாண்டிச் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கு. இந்த நாட்டுலமரணதண்டனையைஒழிக்கணும். என் புள்ள விஷயத்துல எதிர்பாராத விதமாக நிறைய விஷயங்கள் நடந்துஞ்சு. வாக்குமூலத்தைப் பதிவு செஞ்ச சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன் பின்னாடி, நான் கடமையிலிருந்து வழுக்கியிருக்கேன். வாக்குமூலத்தை பேரறிவாளன் சொன்னபடி முழுசாப் பதியலைன்னு சொன்னார்.

அதேபோலமரணதண்டனையை விதிச்ச நீதிபதி கே.டி.தாமஸும் இவ்வளவு ஆண்டுகள் காத்திருக்க வைச்சு மரணதண்டனை கொடுப்பது சரியில்லைன்னு சொன்னார். செங்கொடிமாதிரி ஒரு இளங்குருத்து தன்னைமாய்ச்சுக்கிட்டு உருவாக்கின போராட்டத்தீ இந்த மாநிலமே மரணதண்டனைக்கு எதிரா திரளக்காரணமா இருந்துச்சு.

அரசாங்கம் சட்ட பேரவையில மரணதண்டனையை ஆயுள் தண்டனையா குறைக்கணும்னு தீர்மானம் நிறைவேத்திச்சு. இப்போ முதல்வர் விடுதலை அறிவிப்பையும் வெளியிட்டிருக்காங்க. ஆனா எல்லோருக்கும் இதெல்லாம் வாய்க்குமா, சாத்தியமா? என் காலத்துக்குள்ள இந்த நாட்டுல மரணதண்டனையை ஒழிக்கணும். அதுக்காக கடைசி மூச்சு இருக்குற வரைக்கும் போராடுவேன் என்றார். (முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் சிங்கர் நிகழ்வை கொழும்பில் நடத்த கூடாது

## இயக்குநர் கௌதம் அறிக்கை

தென்னிந்திய தொலைக் காட்சியான விஜய் டிவி நடத்திய சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை இலங்கை கொழும்பில் நடத்தக் கூடாது என திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இயக்குநர் கௌதமன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

2009இல் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலை இன்னும் உலகம் முழுக்க வாழும் தமிழர் மனதில் இருந்து நீங்கவில்லை. அந்த ரணமும் இன்னும் ஆறவில்லை. ஒட்டுமொத்த அந்த இனப்படுகொலையில் இலட்சக்கணக்கான தமிழ் உறவுகள் படுகொலை செய்யப்பட்டது உலகம்முழுவதும்அறிந்த உண்மை.'

2009 தொடக்கம் 2014 வரை 5 ஆண்டுகளாக உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் நீதி கேட்டு போராடிக் கொண்டு இருக்கும் நிலை இன்றைய நிலை.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவில் மனித உரிமை தீர்மானம் நிறைவேறும் நேரத்தில் வஜய் டிவி சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை கொழும்பில் நடத்தப் போவதை அறிந்து மிகவும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானோம்.

அதே நேரத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஜெனீவாவில் மாபெரும் மக்கள் திரள் போராட்டம் நீதி கேட்டு நடக்கும் நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடப்பது தான் வேதனையானது.' இன்றும் நாளையும் CORAL PROPERTY DEVELOPMENT & CEYLONARTS CREATION ஆகிய நிறுவனங்களோடு இணைந்து விஜய் டிவி நடப்பதாக அறிந்தோம்.

இலங்கையில் தமிழர்கள் ஆடிப்பாடி மகிழ்வாகவுள்ளதாக உலகத்திற்கு காட்டும் இலங்கை அரசின் இராஜதந்திர நிகழ்வாக தான் இது நடக்கிறது. இதற்கு விஜய் டிவியும் துணை போவது கொடுமையானது.

தமிழக முதல்வர், சட்டமன்ற தீர்மானத்தோடு மட்டுமில்லாமல் தேர்தல் அறிக்கையிலும் இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலைக்கு தனித் தமிழ் ஈழமே தீர்வு, சர்வதேச பன்னாட்டு விசாரணை தேவை என தமிழர்களுக்கு தொடர்ந்து ஆதரவாக உள்ளார்.

இப்படியிருக்கையில், கொழும்பில் இப்படி ஒரு நிகழ்வு நடப்பதும், அதற்கு விஜய் டிவி துணை போவதும் தமிழக அரசுக்கும் எதிரானது.

எங்கள் பிணங்களின் மேல் ஏறி நின்று யாரும் பணம் பார்க்க முயல வேண்டாம்.

எங்கள் உணர்வுகளை நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

இதை யும் மீறி நிகழ்ச்சி நடந்தால் மானமுள்ள தமிழர்களுக்கு அவர்கள் பதல் சொல்ல வேண்டி வரும். (அ-2)

# உள்நாட்டு உற்பத்தியையே நாம் நம்பியிருக்க வேண்டும்

## பிரதமர் தெரிவிப்பு

இலங்கை, ஏனைய நாடுகளிடம் பச்சை எடுக்கக் கூடாது. நாட்டை முன்னேற்றும் நோக்கத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டி நகரில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர், வெளிநாடுகளில் இருந்து உணவு பொருட்கள் இறக்குமதி செய்யப்பவதை தான் எதிர்ப்பதாக குறிப்பிட்டு ள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்களை நம்பி இருப்பதை காட்டிலும் உள்நாட்டு உற்பத்தியை நம்பியிருக்க வேண்டும்.

இலங்கையில் நாம் உணவு பொருட்களை உற்பத்தி செய்தால், இலங்கை வெளிநாடுகளில் இருந்து இறககுமதி செய்யும் தேவையிருக்காது.

மக்கள் நாட்டில் பொருட்களை உற்பத்தி செய்ய கடினமாக உழைக்க வேண்டுமேயன்றி வேறு நாடுகளிடம் இருந்து உணவு பொருட்களை யாசகம் செய்யக் கூடாது.

அரசாங்கம் மக்களுக்கு குழந்தைகளை போன்று தாலாட்டி உணவு ஊட்டி, ஆடைகளை அணிவித்து விட முடியாது. கடினமாக உழைப்பவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும்.

அமெரிக்காவை விட பொருளாதாரத்தை முன்னேற்ற மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றார். (அ-2)

# பிரபாகரனின் போராட்டம் நியாயமானது- சத்தியராஜ்

(கொழும்பு)

எமது மாவீரர்களின் உயிர்த்தியாகம் வீண்போகக் கூடாது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மாபெரும் பேரணியில் அனைத்து மக்களும் அணிதிரள வேண்டும்.

எமக்கான நீதியை நாம் நிலைநாட்ட எமது உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டும் என இனமான நடிகர் சத்யராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் தமிழ்ச் சொந்தங்கள் ஒன்றிணைந்து நமது வலிமையைக் காட்டவேண்டும். அப்போது தான் சர்வதேச நாடுகளின் பார்வை நம்மீது பட்டுத் திரும்பும்.

நடந்த இனப்படுகொலையை விட ஒரு துயரமான சம்பவம் உலகத்தில நடத்திருக்க முடியாது. அப்போதே சர்வதேசத்தின் பார்வை நம் மீது திரும்பியிருந்தால் நமக்கு தமிழீழம் கிடைத்திருக்கும் என்றார். (அ-2)

# வெலிவேலிய சம்பவம் குறித்த விசாரணை நிறைவுக்கு வந்தது

வெலிவேரிய, ரத்துபஸ்வல பிரதேசத்தில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு நிறைவு செய்திருக்கிறது.

சுத்தமான குடிநீர் கேட்டு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்திய ரத்துபஸ்வல மக்கள் மீது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 56 பேர் காயமடைந்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்தி வந்தது.

இதன்அடிப்படையில் ஆணைக்குழு அந்த சம்பவம் குறித்த அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புன்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதி தேர்தலை இவ்வாண்டு நடத்துமாறு கோருவேன்-ரணில்

(கொழும்பு)

இவ்வாண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கோரப்பட உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வனாத்தமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போதைய ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கோரி போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி தேர்தலை வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி வீதியில் இறங்கி போராட்டம் நடத்தவுள்ளது.

எதிர்க்கட்சிகள் இணைந்து இந்த அரசாங்கத்தை கவிழ்த்து, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் என ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.கட்சியே வெற்றிபெறும் என அக்கட்சியின் உறுப்பினர்கள் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிறை உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் கடமையாற்றி வரும் 250 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த உத்தியோகத்தர்கள் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் கைத் தொலைபேசி, போதைப் பொருள் போன்றவற்றை சட்டவிரோதமான முறையில் எடுத்துச் சென்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலைகளின் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் அதிகளவு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# இலங்கையின் உயர்மட்ட குழு அடுத்தவாரம் ஜெனீவா பயணம்

ஜெனீவா 25 ஆவது மனித உரிமை பேரவையில் பங்கேற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தலைமையிலான உயர் மட்டக் குழு அடுத்தவாரம் முதற்பகுதியில் ஜெனீவா பயணமாகிறது. இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க எதிர்வரும் 9 ஆம் திகதி தான் அங்கு செல்ல இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு எதிராக மனிதவுரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் முதல் ஜெனீவாவில் இடம்பெற இருப்பதாக வெளிவிவகார அமைச்சு கூறியது.

இதேவேளை ஜெனீவா மனிதவுரிமைப் பேரவை அமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 28ஆம் திகதி வரை இடம்பெறுகிறது. இதேவேளை இலங்கை குழுவின் தலைவரான அமைச்சர் ஜி. எல் பீரிஸ் எதிர்வரும் 5 ஆம் திகதி மனித உரிமை பேரவையில் உரையாற்ற இருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை குழுவில் உள்ளடக்கபபட்டுள்ள அங்கத்தவர்கள் குறித்து இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையெனவும் ஜனாதிபதியின் செயலாளர் வெளிநாட்டில் உள்ளதால் அவர் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளாரா என்பது குறித்து தற்போதைக்கு கூற முடியாது என்றும் அவர் கூறினார்.

ஜெனீவா மாநாடு குறித்து கருத்துத் தெரிவித்த குழு உறுப்பினரான அமைச்சர் மஹிந்த அமரசிங்க இலங்கைக்கு அங்கத்துவ நாடுகளின் ஆதரவுகளைத் திரட்டுவதற்கான இறுதிச் சட்ட முன்னெடுப்புகள் இலங்கைக் குழுவினால் ஜெனீவா மாநாட்டின் போது பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடத்தை விட இம்முறை இலங்கைக்கு கூடுதலான நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக இலங்கைக்குழு ஒருமித்த முயற்சியை எடுக்கும். அதேவேளை இலங்கைக்கு எதிராக ஆதரவு திரட்டும் முயற்சிகளும் பரந்தளவில் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# அரசாங்கத்தை எதிர்ப்பது எதிர்க்கட்சியின் பணியல்ல

## அஸ்கிரிய பீடாதிபதி

உள்நாட்டு பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகளை முன்வைக்க வேண்டுமென கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் கட்சித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்தின் சகல திட்டங்களையும் எதிர்ப்பது எதிர்க்கட்சியின் பணியல்ல. வெளிநாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

நாட்டை அபிவிருத்தி செயய நடவடிக்கை எடுக்க வேண்டும்: எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

நாம் வாழ்வதற்கு வேறு நாடுகள் கிடையாது. எனவே இந்த நாடடை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமானது. ஆளும கட்சியின் குற்றங்களை சர்வதேச சமூகத்திடம் முறையிட்டால், அதனை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு இலங்கை மீது தலையீடுகளை செய்ய முயறசிப்பார்கள் என உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நெல்மூடைகள் திருட்டு கல்மடுவில் சம்பவம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடு கிராமத்தில் 4 இலட்சத்து 14 ஆயிரம் ரூபா மதியான நெல் மூடைகள் களவாடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் பருவ மழை பெய்யாததினால் காலபோகச் செய்கைகள் அழிவடைந்தன.

ஆயினும், விளைந்த மிகக்குறைவான வயல் நிலங்களில் அறுவடையினை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறாக அறுவடை செய்யப்பட்ட பின்னர் உலர வைத்து மூடைகளாக கட்டப்பட்ட நிலையில் வயலில் வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் கடந்த வாரம் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவத்தினால் தாமும் மேலும் வறுமை நிலைக்குட்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ-9-263)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் அளம்பில் பொதுச் சந்தை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குச் சொந்தமான அளம்பில் பொதுச் சந்தை பல்வேறு அடிப்படைவசதிகளின்றி இயங்கி வருவதனால் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இச் சந்தை இயங்கிவருகின்றது.

இந்நிலையில் அளம்பில் வடக்கு, தெற்கு, செம்மலை, செம்மலை கிழக்கு, உப்புமாவெளி, குமுழமுனை கிழக்கு, மேற்கு, மத்தி, தண்ணிமுறிப்பு, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 64 குடும்பங்கள் இச் சந்தையை பயன்படுத்தி வருகின்றனர்.



ஆயினும் யுத்தத்தினால் சேதமடைந்த சந்தையின் மூன்று கட்டடங்களும் புனரமைப்புச் செய்யப்படாமையினால் கூரைகள் சேதமாக காணப்படுகின்றன.

இதனால் மழை, வெயில் காலங்களில் வியாபாரிகள் பல்வேறு இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

அத்தோடு, சந்தைக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாமையினால் தெருவோரங்களில் திரிகின்ற நாய்களும் மாடுகளும் சந்தையினை அசுத்தப்படுத்தி வருகின்றன.

சந்தைக்கான கிணறு உள்ள போதிலும் அது சுத்திகரிக்கப்படவில்லை. குடிநீர் வசதிகளும் இல்லை.

கழிவகற்றல் செயற்பாடுகள் இடம் பெறுவதில்லை. சந்தைக் கடைத் தொகுதி வசதிகள், மின்சார வசதி, களஞ்சிய அறைவசதி, தளபாடவசதி, இறைச்சிக்கடைகள் விஸ்தரிப்பு என்பனவும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சந்தைக் காணி பள்ளமாகக் காணப்படுவதனால் மழை காலங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்றது. இதனால் நோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றன.

அதிகமான மக்களின் பயன்பாட்டிலுள்ள இச் சந்தைக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் பட்சத்தில், முழு நேரமாக இச் சந்தை இயங்க முடியுமென வியாபாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனவே சம்பந்தபட்டோர் சந்தையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

## கற்கள் பரவப்பட்டும் வீதி புனரமைப்பில் தாமதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி வைத்தியசாலை வீதியில் கற்கள் பரவப்பட்டு நீண்ட நாட்களாகியும் இது வரை புனரமைக்கப்படாமையால் வைத்தியசாலைக்குச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன், பல்வேறு விபத்துக்களும் இடம் பெற்று வருவதாக சுட்டிக்காட்டி இவ் வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி வைத்தியசாலை வீதிஆர் இட்டு புனரமைப் பதற்குத் தெரிவு செய்யப்பட்டு உரிய ஒப்பந்தக்காரர்களிடம் வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் பயணிக்கமுடியாத நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக வீதிக்கு கற்கள் பரவப்பட்டுள்ளதால் இவ்வீதியை பயன்டுத்துகின்ற நோயாளர்கள் பாடசாலை மாணவர்கள் அடிக்கடி விபத்துக்களுக்கு உள்ளாகுவதுடன் பயணிப்பதற்கு பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இவ்வீதியை உரியவர்கள் கவனமெடுத்துப்புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-23-254)




# 25 மில்லியன் ரூபா செலவில் மூப்பன்குளம் புனரமைக்கப்படும்

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிராட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள மூப்பன்குளம் 25 மில்லியன் ரூபா செலவில் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மஹாலிங்கம் தயாநந்தன் தெரிவித்துள்ளார்.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமலுள்ளதால் இங்கு விவசாயக் குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

இக்குள புனரமைப்பு தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் ஊடாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷவின் கவனத்திற்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் கொண்டுவந்த நிலையில், இக்குள புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2-250)

# தமிழ் மக்கள் சார் மீனவப்பிரதிநிதிகள் அரசின் பொறிக்குள் சிக்கிவிடக்கூடாது

## வடக்குமாகாண சபை உறுப்பினர் சிவமோகன்

(பூந்தோட்டம்)

இலங்கை- இந்திய மீனவர்களிடையில் மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தை எதிர்வரும் 10 ஆம்திகதி கொழும்பில் நடத்துவ தற்த அரசு தீர்மானித்துள்ளது.

எனவே இப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்கள் சார்பாக கலந்து கொள்ளவுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை இலங்கையின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுவிடாமல் புத்திசாதுரியமாக நடந்து கொள்ளுமாறு வடமாகாண சபையின் உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் அறிவுரை வழங்கியுள்ளார்.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றை தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தொப்புள்கொடி உறவுவழிமுறையாக தொடரும் தமிழக – தாயக குடும்பப்பிணைப்பை அறுத் தெறிந்து விடும் சூட்சுமமான சூழ்ச்சியில் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

சீனா உள்ளிட்ட இலங்கையுடன் நட்பு பாராட்டும் பல நாடுகள் எமது கடல வளத்தை சூறையாடி வருவதாக ஆழ் கடல் தொழிலில் ஈடுபடும் எமது மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆழ் கடலில் பல நாட்களாக தரித்து நின்று இராட்சத இயந்திர வலு படகுகள் மூலம் வேற்று நாட்டவர்கள் தொழிலில் ஈடுபடுவதை எம்மிடம் உறுதிப்படுத்தியும் உள்ளனர்.

இவ்விடயத்தில் அரச நாடாளுமன்றத்தின் அனுமதி உள்ளது என்றும் கூட சந்தேகம் எழுகின்றது.

முள்ளிவாய்க்காலில் கொத்து கொத்தாக எம் மக்கள் செத்து மடிந்த போது, தம் உயிரை மாய்த்தாவது போரை நிறுத்தி எம் மக்களின் உயிரை காப்பாற்றி விட வேண்டும் என்று, தம் உடலை தீயிட்டுக்கொளுத்தி, தம்மை ஈகிகள் ஆக்கிக் கொண்ட எம்முடைய தமிழக வாழ் மக்கள் எம்மைச் சுரண்டி வளத்தைவாரி அள்ளிச்சுருட்டிக் கொண்டு எம்மை எல்லாம் பட்டினிச் சாவில் போட்டுக்கொன்று விடுவார்கள் என்று எந்த ஈழத்தமிழனும் புலம்பவில்லை. இழுவை வலையை பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும் சிறு எண்ணிக்கையிலான மன்னார் மாவட்ட தமிழ் மீனவர்களுக்கு தடை விதித்திருக்கும் இந்த அரசு, தென்னிலங்கையில் தாராளமாக இழுவை வலையை தொழிலுக்குப் பயன்படுத்த சிங்கள மக்கள் பாவிப்பதற்கு அனுமதித்துள்ளது.

நாயாற்று பிரதேசத்தின் தென்பகுதி மீனவர்கள் 54 பேர் மட்டுமே தொழில் செய்ய உரித்துள்ள நிலையில், 250 படகுகளுடன் 250 இற்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்களையும் கொண்டு வந்து விட்டு எமது மக்களின் மீனவளத்தை சூறையாட வில்லையா?

அதேவேளை நாயாற்று பிரதேசத்தில், நான்கே நான்கு தமிழ் மீனவ குடும்பங்கள் தான் தற்போது கடல் தொழிலில் ஈடுபடுகின்றன. இதற்கு முன் பல தமிழ் குடும்பங்கள் அங்கு தொழில் செய்து வந்த நிலையில் இன்று நான்கே நான்கு குடும்பங்கள்தான்தொழிலில் ஈடுபட்டுள்ளன என்றால், அதற்கு காரணம், அடிப்படை வளங்கள் சூறையாடப்பட்டுள்ளமையும், இறுதி யுத்தத்தில் பல தமிழ் குடும்பங்கள் இறந்து போனமையுமாகும்.

இலங்கை அரசு தமிழர் தாயக பூமியில் இன விகிதாசாரத்தை எத்தகைய முறையில் மாற்றியமைக்கிறது என்பதற்கு இந்த ஒரு எடுகோளே போதும்.

எமது மக்களின் பிரச்சினையை தீர்ப்பதில் இதயசுத்தியில்லாத இந்த அரசு, தென்னிலங்கையில் இருந்து மீனவர்களை இறக்குமதி செய்து எமது கடல் வளத்தை தாறுமாறாக சுரண்டிக் கொண்டு, எமது மக்களின் வாழ்வாதாரம் பற்றி சிந்திப்பது போல் பாசாங்கு செய்து, இருநாட்டு மீனவர்கள் உறவில் விரிசலை உண்டு பண்ணி பகை உணர்வை வளர்க்க முனைகின்ற அரசின் இத்தகைய வஞ்சிப்பு நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக் கின்றோம்.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு உலகமே திரண்டு வந்து நீதி கேட்டு ஜெனீவா நோக்கி வீறு நடை போடும் சூழலில், அதற்கு இந்திய தளத்திலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து ஆதரவு பெருகி வரும் நிலையில், எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பில் இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையில் மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானித்துள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை பகுதிகளிலிருந்து எமது தமிழ் மக்கள் சார்பாக கலந்து கொள்ளும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் **"நம் கையைக் கொண்டே நம் கண்ணை குத்த வைக்கும்"** இலங்கை அரசின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு விடாமல், சத்தியின் கூரிய விளிம்பில் நடக்க வேண்டிய சூழல் ஒன்றுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டால், வலு கவனமாக எப்படி நம் காலடிகளை எடுத்து வைப்போமோ அதேயளவு கவனத்துடன் செயற்படுமாறும், அரசின் மிகவும் சூட்சுமமான பொறிக்குள் அகப்பட்டு நாம் மாய்ந்து விடக்கூடாது எனவும் அவர் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-9-266)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விவாதச் சுற்றுப் போட்டி யா/இந்துக்கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் பேச்சுத் திறனையும் சிந்தனை ஆற்றலையும் வளர்த்தெடுக்கும் முகமாக இலங்கை தமிழ் விவாதிகள் கழகம் நாடளாவிய ரீதியிலான விவாத சுற்றுப் போட்டியினை மொழிமுனை 2014 எனும் பெயரில் நடத்தி வருகின்றது.

அதன் ஓர் பகுதியாக யாழ். மாவட்ட தெரிவுப் போட்டியினை இளைஞர் இலக்கிய மன்றத்துடன் இணைந்து நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

மேற்படி போட்டிக்கு சமுகமளிக்கும் பாடசாலைகளை காலை 8.30 மணிக்கு முன்னதாக வருகை தருமாறும் இளைஞர் இலக்கிய மன்றத் தலைவர் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ கேட்டுக்கொண்டுள்ளார்.


புதிதாக போட்டியில் பங்கேற்க விரும்பும் பாடசாலைகள் 0776960 063 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (அ)

## பிரிவுத்துயர் பகிர்வு



**நித்தியா தவயோகநாதன்**

பிரான்சைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியா தவயோகநாதன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு 9 ,Avenue Voiron , 93700, Drancy, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**கந்தையா இராசலிங்கம்**

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசலிங்கம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# சர்வதேச விசாரணைகள் ஒருபோதும் சுயாதீனமானதாக அமையாது!

## ஜனாதிபதியின் சர்வதேச பிரதிநிதி



(கொழும்பு)

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைகள் ஒருபோதும் சுயாதீனமானதாக அமையப்போவதில்லை என மனிதவுரிமை தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச பிரதிநிதியும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமைப பேரவை அமர்வுகள் அண்மித்துள்ள நிலையில் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து கூறுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தாருஸ்மன் அறிக்கை, நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர்,

இதனைக் கருத்திற் கொண்டு சர்வதேச விசாரணைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

மிகவும் அர்ப்பணிப்புடன் கஷ்டப்பட்டு பெற்றுக்கொண்ட சமூக, பொருளாதார ஸ்திரத்தன்மையையும் சுதந்திரத்தையும் சீர்குலைக்க சர்வதேச சக்திகள் மேற்கொள்ளும் சூழ்ச்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

எவர் எதைக் குறித்து சந்தோஷப்பட்டாலும் நாம் எமது நாட்டையோ பாதுகாப்புப் படையினரையோ காட்டிக்கொடுக்கப் போவதில்லை.

மகவும் அர்ப்பணிப்புடன் பல சவால்களுக்கு மத்தியில் பெற்றுக்கொள் ளப்பட்ட சமூக பொருளாதார அபி விருத்திக்கான ஸ்திரத் தன்மையையும் சுதந்திரத்தையும் சீரழிக்கும் சர்வதேச சூழ்ச்சிக்கு இடமளிக்கப் போவதில்லை.

மனிதவுரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச பிரதிநிதி என்ற வகையில் நான கூறவிரும்புவது சர்வதேச விசாரணைகள் ஒருபோதும் சுயாதீனமானதாக இருக்கப்போவதில்லை என்பதே. இதற்கு தருஸ்மன் அறிக்கை சிறந்த உதாரணமாகும்.

இந்த குழுவுக்குத் தலைமை வகித்த இந்திய முன்னாள் நீதியரசர் பகவதி அவர்களுக்கும் காண்பிக்காமல் மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்த சிலர் இணைந்து சம்பந்தப்பட்ட அறிக்கையை வெளியிட்டனர். எமது நாட்டுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

இதனையடுத்து நான் உடனடியாகவே இந்தியாவுக்குச் சென்று முன்னாள் இந்திய நீதியரசரான அக்குழுவின் தலைவர் பகவதி அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

அவர் சம்பந்தப்பட்ட அறிக்கையைத் தாம் நிராகரிப்பதாகத் தெரிவித்தார். அதனையடுத்தே அந்த அறிக்கை செயலற்றதாகியது.

இதனை நாம் பிரசித்தப்படுத்தவில்லை. எனினும் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெற்றமை உண்மையாகும்.

சர்வதேச விசாரணைகள் ஒருபோதும் சுயாதீன மானதாக அமையப்போவதில்லை என்பதை இதனை வைத்துக்கூற முடியும்.

எத்தகைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இறுதியில் அதனை அறிக்கையாக வெளியிடும்போது அது இலங்கைக்கு எதிரானதாகவே இருக்கும் என்பதை நாம் அறிவோம்.

சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும்போது சம்பந்தப்பட்ட நாடு அதனை விரும்பவில்லை என்றால் பலவந்தமாக அதனை மேற்கொள்ள முடியுமா என கேட்டதற்கு பதிலளித்த அமைச்சர்,

மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டு அதன் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது அதற்கு நாம் இடமளிக்காவிட்டால, அவர்கள எமது நாட்டுக்கு வராமல் வெளியில் இருந்துகொண்டு அறிக்கை தயாரிக்கக்கூடிய நிலையும் உள்ளது. எவ்வாறாயினும் அதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை.

குறிப்பாக, அண்மையில் நாம் நவநீதம்பிள்ளையை வரவழைத்தோம், அவர் இங்கு வந்து நாட்டின அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் நேரடியாகக் கண்டுணர்ந்து எம்மோடு பேச்சு நடத்தினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அதுபோன்ற வேறு சந்திப்புகளின் முடிவுகளையே அவர் அறிக்கையாக தயாரித்திருந்தார்.

இவற்றை தெரிந்துகொண்டும் பல முன்னுதாரணங்களை வைத்துக்கொண்டும் எம்மால் மீண்டும் இதுபோன்ற சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்க முடியாது.

சர்வதேச குழுக்கள் இங்கு வந்து எதைச் செய்தாலும் முடிவில் எதனை அறிக்கையாக வெளியிடுவர் என்பது எமக்குத் தெரியும். ஏனெனில் இத்தகைய அறிக்கைகளை பலம் வாய்ந்த சில நாடுகளே தயாரிக்கின்றன என்பதையும் நாம் அறிவோம்.

நவநீதம்பிள்ளையைப் பொறுத்தவரை அவர் நீண்டகாலமாக இலங்கையின் உள்விவகாரங்களை அவதானித்து வந்துள்ளார்.

அதற்கிணங்கவே இவ்வாறு செயற்பட்டுள்ளார். எனினும் அவருக்கு முன்பு அப்பதவியிலிருந்தவருடன் நான் பலமுறை தொடர்பு கொண்டு ள்ளேன். அவர் இந்தளவு பாரபட்ச மாக செயற்பட்டதில்லை என்பதைக் குறிப்பிடலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக விழா சனி, ஞாயிறு தினங்களில்

(யாழ்ப்பாணம்)

நாடகத்தை நோக்கிய பார்ப்போரின் வருகையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும், உதிரிகளாக மேடையேற்றப்பட்ட நாடகங் களை ஒரே களத்தில் ஒன்றிணைக்கும் செயற்பாடாகவும் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள *நாடக விழா* இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இல, 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இரு நாட்களும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நாடக விழாவில் ஏழு வகையான நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

முதலாம் நாளில் *நிற்க கற்க, எட்டு முள வேட்டி* ஆகிய நவீன நாடகங்களும் *குவேனி தென்மோடி* நாட்டுக்கூத்தும் மேடையேற்றப்படும். இரண்டாம் நாளில் *மண விலங்குகள், எதற்கும் ஒரு காலமுண்டு* ஆகிய நவீன நாடகங்களும் *கடமை வீரன், சிறுவர் நாடகம், சத்திய வேள்வி* இசை நாடகம் ஆகியனவும் மேடையேற் றப்படும்.

இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடக விழாவை பார்வை யிட நாடகக் கலையில் ஆர்வமுள்ள அனைவரையும் வருகை தருமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

## சர்வதேச அழுத்தத்தை குறைப்பதற்கு அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும்

### விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

எதிர்வரும் மாகாண சபை தேர்தலை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட தமது கட்சியின் கொள்கை பிரகடனத்தை சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கவிருப்பதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நாட்டிற்கு எதிராக சர்வதேச அழுத்தத்திற்கு அரசாங்கமே மூல காரணமாகும். இதனால் நாட்டு மக்களே பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகுவர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நவசமசமாஜக்கட்சியின் தேர்தல் கொள்கை பிரகடன வெளியீட்டு விழாவின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்நாட்டில் மீன்பிடி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதன் காரணமாக மக்கள் வாழ்வதற்கு வழியின்றி தவிக்கின்றனர். இவ்வரசாங்கம் மக்கள் மீது வரிக்கு மேல் வரி விதிக்கின்றது. நாட்டில் ஊழல் மோசடிகள் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

இவ்வரசின் செயற்பாட்டினை கண்டிப்பதற்கோ அதற்கெதிராக போராடுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு தைரியம் இல்லை. அத்துடன் தேசிய பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் ஐ.தே.கட்சிக்கோ ஜே.வி.பி.க்கோ தெளிவான கொள்கை கிடையாது.

எனவே இவ்வாறான எதிர்க் கட்சியினால் இவ்வாட்சியை கவிழ்க்க முடியாது. இந்நாட்டிற்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை குறைக்க வேண்டுமாயின் இவ்வரசை கவிழ்க்க வேண்டும் என்றார். (அ-2)

## வர்த்தக சங்க பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் செ.செல்வக்குமார் அறிவித்துள்ளார். (அ-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நடைபெறும் இசை நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு கலைஞர்கள் பங்கேற்கக்கூடாது

இலங்கையில் இன்றும் நாளையும் நடைபெறும் இசை நிகழ்ச்சியில் தமிழ் நாட்டு இசைக் கலைஞர்கள் பங்கேற்கக கூடாது என வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசின் ஏற்பாட்டில் இலங்கையில் இசை நிகழ்ச்சி என்ற பெயரில் இன்றும் நாளையும் உலக நாடுகளை ஏமாற்றும் வேலைக்கு ஏற்பாடாகியுள்ளது. ஈழத்தில் நடைபெற்ற படுகொலைகளை மறைப்பதற்காக நரித் தந்திரத்தோடு இந்த இசை விழாவை நடத்துகிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள விஜய் தொலைக்காட்சியில் பாடல் இசைக்கும் கலைஞர்கள் இந்த இருநாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

விஜய் தொலைக்காட்சி இசைக்குழுவினரும், இலங்கைக் கலைப்படைப்பினரும் இணைந்து இந்த இசை விழாவை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இன்று கொழும்பு மருதானை, புனித வளனார் கல்லூரியிலும், நாளை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்திலும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

கொல்லப்பட்ட தமிழர்களின் எலும்புக் கூடுகள் மண்ணிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கின்றன. நெஞ்சைப் பதைபதைக்கச் செய்யும் ஒரு காணொளி வெளிவர இருக்கிறது.

இந்நிலையில் கொழும்பில் சிங்களவன் நடத்தும் கேளிக்கைக் கொண்டாட்டங்களில் தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களைப் பங்கேற்க வைப்பதன் மூலம் தாய்த் தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எந்த எதிர்ப்பும் இல்லை என்று வெளி உலகத்திற்குச் சொல்வதற்காகவே இந்த இசை நிகழ்ச்சி நடக்கிறது.

ரோமாபுரி பற்றி எரிந்தபோது நீரோ பிடில் வாசித்ததுபோல விஜய் தொலைக்காட்சி இசைக் கலைஞர்கள் அங்கு பாடப் போகிறார்களா? ஈழத் தமிழர்கள் எழுப்பிய மரண ஓலம் இன்னும் அங்கு காற்றில் கலந்துதான இருக்கிறது. காயப்பட்டுப் போன தமிழர்கள் மனங்களில் நெருப்பைப் போடும் வேலையில் விஜய் தொலைக்காட்சி ஈடுபட வேண்டாம். இந்த நிகழ்ச்சிகளில விஜய் தொலைக்காட்சியில் பாடுகின்ற இசைக்கலைஞர்கள் பங்கேற்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். (2)

பாரதச் செய்தி



இந்திய விஜயம் மேற்கொண்டுள்ள சவுதி இளவரசர் சல்மான் அப்துல் அஜிஸ் அல் சவு டில்லியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்ததை படத்தில் காணலாம்

## விடுதலைக்கு தடை ராஜீவ் சிலைகள் உடைப்பு பெற்றோல் குண்டும் வீச்சு

# தமிழகத்தில் வலுக்கிறது காங்கிரசிற்கு எதிர்ப்பு







முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள நளினி உட்பட நான்கு ஆயுள் தண்ட னைக் கைதிகளை விடுவிக்க உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்ததையடுத்து தமிழகத்தில ராஜீவ் காந்தியின் சிலைகள் மூன்று இடங்களில்உடைத்து சேதமாக்கப் பட்டுள்ளன.

அதேவேளை சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியின் அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழகத்திலுள்ள எண்ணூர் துறைமுகத்துக்கு முன்னாள் தமிழக முதல்வர் காமரா ஜரின பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதற்காக மத்திய அமைச்சர் ஜி.கே. வாசனுக்கு பாராட்டு விழா நேற்று முன் தினம் நடந்தது. பாராட்டு விழாவுக்காக காங்கிரஸ் தரப்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அந்தப் போஸ்டர்கள் மீது நாம் தமிழர் கட்சியினர் முற்றுகையிடப் போவதாக போஸ்டர் ஒட்டினார்கள். இதைப் பார்த்த காங்கிரஸ் தொண்டர்கள் ஆவேச மடைந்ததோடு ராயப் பேட்டை விழாவில் திரண்டிருந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு இந்த தகவல் கொடுக்கப்பட்டது.

இதையடுத்து தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன், கராத்தே தியாகராஜன், ராங்க பாஷ்யம், ஹரி கிருஷ்ண ரெட்டி, அகரம்கோபி, கொளத்தூர் கோபால, எஸ்.எம். குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும தொண்டர்கள் சத்திய மூர்த்திபவன் முன்பு குவிந்தனர். நாம் தமிழர் கட்சியினருக்கு பதிலடி கொடுப்பதற்கு காங்கிரசார் காத்து நின்றனர்.

அண்ணாசாலையும் ஜி.பி. ரோடும் இணையும் இடத்தில் நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை அறிவுச் செல்வன் தலைமையில் தொண்டர்கள் திரண்டனர். அவர்கள் சத்திய மூர்த்தி பவனை நோக்கி சென்றனர். 100 அடிக்கு முன்னதாக வந்தபோது காங்கிரஸ் தொண்டர்கள் அவர்களை அடித்து உதைத்து விரட்டினர். நாம் தமிழர் கட்சியினர் ஓட்டம் பிடித்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பதற்றமும், பரபரப்பும் நிலவியது.

அங்கு வந்த பொலிஸார் தடுப்பு வேலி அமைத்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் காங்கிரசாருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. காங்கிரஸ் அலுவலகம் முன்பு வைத்த தடுப்பு வேலியை அகற்றுமாறு தொண்டர்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. பொலிஸார் அவர்களை சமாதானப்படுத்தியதையடுத்து மறியல் கைவிடப்பட்டது.

சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற மோதலின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் நள்ளிரவில் சென்னையில் 3 இடங்களில் ராஜீவ்காந்தி சிலைகள் உடைக்கப் பட்டுள்ளன. வேப்பேரி பொலிஸ் நிலையம் அருகில் உள்ள ராஜீவ்காந்தியின் சிலை, பெரம்பூர்பேக்ஸ்ரோட்டில்ஆகிய இடங்களில் ராஜீவ் காந்தி யின சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ராஜீவ் காந்தி சிலை உடைப்புக்கு எதிர்ப்பு தெரிவிதது பேரூரில் உள்ள நாம் தமிழர் கட்சி அலுவலகத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினி உள்ளிட்ட நான்கு ஆயுள் கைதிகளையும் வடுவிக்க தமிழக அரசு எடுத்த முடிபுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தமையும் அந்த இடைக்காலத்தடைக்கு காரணமான மத்தியில் ஆட்சியிலுள்ள காங்கிரஸ் கட்சியினர் மீது தமிழகத்தில் எதிர்ப்புகள் வலுப் பெற்று வரும் நிலையில் ராஜீவ் காந்தியின் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தமிழகத்தில் ஏற்கனவே பல போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில ராஜீவ் காந்தியின் சிலை உடைக் கப்பட்டுள்ளமை காங்கிரஸ கட்சியினருக்கு அதிக கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை ஈழத்தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் கையாண்டு வரும் கடும்போக்கு நடவடிக்கைகள் அக் கட்சியினர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிருப்தி ஏற்கனவே மாநிலத் தேர்தலில் வெளிப்படுத்தப் பட்டிருந்ததோடு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலிலும் எதிரொலிக்கும என்பதில் சந்தேகமில்லை. (2-6)

## மன்மோகன்சிங்கை மியன்மாரில் மகிந்தராஜபக்ச சந்திக்கக் கூடாது

### பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்து

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன சிங்கை மியன்மாரில் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடு படவுள்ளதாக வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது.

இச் சந்திப்பு பெரும் அதிர்ச்சியையும வருத்தத்தினையும் அளிப் பதாக பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் தெரிவிததுள்ளார். அத்துடன் இலங்கை ஜனாதிபது பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கக் கூடாது என அவர்வலியுறுத தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மியன்மாரில் நடைபெறவிருக்கும் பல்துறை தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்க்கடல் முன்முயற்சி அமைப்பின மூன்றாவது மாநாட்டில் பங்கேற்க அந்நாட்டிற்கு அடுத்தவாரம் செல்லும் பிரதமர் மன்மோகன்சிங, அங்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை எதிர்வரும் 4ஆம திகதி சந்திக்க இருப்பதாக வெளி யுறவுத் துறை அறிவித்திருக்கிறது.

இலங்கையில் நடந்த மனித வுரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நம்பகமான விசாரணை நடத்தி குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும என்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2 முறை தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட போதிலும், அதன் மீது எந்த நடவடிக்கையும் இலங்கை அரசு மேற்கொள்ள வில்லை. இதற்கு மேலும் இலஙகைக்கு காலக்கெடு வழங்க முடியாது என்ற நிலையில் அந்நாட்டின் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த ஆணையிட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவ நீதம்பிள்ளை பரிந்துரைத்திருக்கிறார.

நவநீதம்பிள்ளையின் பரிந்துரையை ஏற்று இலங்கை மீது போர்க்குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்த வலியுறுத்தும தீர்மானத்தை நாளை மறுதினம் முதல 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமை பேரவையின் கூட்ட த்தில் இந்தியாவே கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடையே எழுந்திருக்கிறது.

இத்தகைய சூழலில், போர்க்குற்றவாளியாக கருதப்பட வேண்டிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்து பேசவிருப்பது பெரும் அதிர்ச்சியையும் வருத்தத்தை யும் அளிக்கிறது.

இலங்கை ஜனாதிபதியை இந்திய பிரதமர் சந்திப்பது, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை தடுத்து நிறுத்தும் ஆபத்து உள்ளது. மனித உரிமைப்பேரவையில் செல்வாக்குள்ள நாடாக இந்தியா திகழ்கிறது.

ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை இந்தியாவின் நிலைப்பாட்டையே ஆதரிக்கும். இந்த நேரததில ராஜபக்ஷவை மன்மோகன்சிங் சந்தித்தால், அது பெரும்பான்மையான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப் படவுள்ள தீர்மானத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும் வாய்ப்புள்ளது.

எனவே, ஈழத் தமிழர்களை இனப் படுகொலை செய்த அரசை மியன்மார் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் சந்திக்கக கூடாது. மாறாக, இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற மற்றும்இனப படுகொலை விசாரணை நடத்த வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித வுரிமைப் பேரவையில் கொண்டு வர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தோடு கோபித்துக் கொண்டு
கால் கழுவாமல் செல்லலாமோ?

*– தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## இரணைமடுக்குள இதிகாசம் ஜெனிவாவுக்கும் போகுமோ?

இரணைமடுக் குளத்துத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவது தொடர்பில் இன்னமும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை என்றே கூறவேண்டும்.

இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு சென்றால், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பாதிப்படைவர் என்பது அப்பகுதி விவசாயிகளின் கருத்து.

இரணைமடுக் குளத்துநீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்ற திட்டத்தை நிறை வேற்றுவதில் ஈடுபட்டுள்ள துறைசார் நிபுணர்கள்; கிளிநொச்சி விவசாயிகளுக்கு தேவையான நீரை விடுத்து அதற்கு மேலதிகமாக இருக்கக் கூடிய நீர் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்படும். இதுவன்றி கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளை பாதிப்புக்கு உள்ளாக்கி இரணைமடுக் குளத்துநீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல மாட்டோம் என்கின்றனர்.

இருந்தும், இரணைமடுக்குள விவகாரம் இதிகாசமாகத் தொடர்கிறது. இப்பிரச்சினையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுமுகமாகத் தீர்த்திருக்க வேண்டும்.

இருந்தும் ஏதோ தாங்களும் மாநாடு கூட்டி பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற ஒரு காட்டாப்பு நடக்கிறதே தவிர, இரணைமடுக்குள விவகாரம் இதுவரை நாளில் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

மாற்றம் செய்யப்பட்டு இரணைமடுக்குள நீர் விநியோகத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்துள்ள அதேநேரம்,

யாழ் குடாநாட்டுக்கான இரணைமடுக்குள நீர் விநியோகத்திட்டம் உடனடிச் சாத்தியமில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆக, இங்கு மாற்றம் செய்யப்பட்டு நீர் விநியோகத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்பதன் அர்த்தம் இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பதாக அமையும் என்று எடுத்துக் கொள்ளலாமா? என்ற கேள்வி இப்போது எழுகின்றது.

இரணைமடுக்குள நீர் விநியோகத்திட்டம் இப்போதைக்கு சாத்தியமில்லை என்றால், அது எப்போது சாத்தியமாகும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சாத்தியமாக அமையும் போது, ஆசிய அபிவிருத்தி வங்கி அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமா? என்பது அடுத்த வினா. ஆக, இரணைமடுகுள விவகாரத்தை பேசாமல் விட்டு விடுவதற்கான ஒரு உபாயமாகவே **...மாற்றங்களுடன் நடைமுறைக்கு வரும்...** என்று எங்கள் தமிழ்த் தலைவர்கள் திருவாய் மலர்ந்தனரா?

அட! இலங்கை இன விவகாரம் ஜெனிவா சென்றதற்கு நாங்களே முழுக்காரணம் என்று கூறும் எங்கள் கூட்டமைப்பு, இரணைமடுக் குளத்து நீர் விநியோகத்திட்டத்தை ஜெனிவாவுக்கு கொண்டு சென்று அங்கு வைத்து தீர்மானிப்போம் என்று கூறுவதற்கு அதிகநேரம் எடுக்காது என்பதால், இரணைமடுக்குள இதிகாசம் மூன்றாம் உலகப் போர் என்ற கவிஞர் வைரமுத்துவின் இதிகாசத்துடன் இரண்டறக் கலந்து கொள்ளட்டும்.

# நல்லனவே தரும் மகாவேள்வி

பல்வளஞ்சேர் வரலாற்றுச் சிறப்புமிகு உசன் கிராமத்தின் இரு கண்களாகத் திகழ்வன உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயமுமாகும். இரு ஆலயங்களையும் தாபித்தவர்கள் பெரியார் வைத்திலிங்கம், சேர்.பொன். இராமநாதன் ஆகியோர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமரர் சேர். பொன்.இராமநாதன் பாடசாலையை பார்க்கவரும்போது பெரியார் வைத்திலிங்கத்துடன் சேர்ந்து உசன் கந்தசுவாமி கோவிலைத் தரிசனம் செய்தே செல்வார்.

மிகத் தொன்மைக் காலத்தில் இயற்கையை வழிபட்ட காலத்தில் நாட்டு மக்களின் நலன்வேண்டி முனிவர்கள், சித்தர்கள் பெருவனங்களில், பெருவிருட்சங்கள் மத்தியில் யாகம் செய்யும் சிறு வீடு அமைத்து யாகம் செய்து வந்தனர். இப்பணிக்கு நாட்டு மன்னன் முதல் மக்கள் வரை ஊக்குவிப்பைச் செய்து வந்ததோடு யாவரும் தவறாது இதில் கலந்தும் கொண்டனர். இதன் பின் உருவ வழிபாட்டை ஆலயங்கள் அமைத்து செய்து வந்தகாலம் தொடக்கம் யாகத்தை அந்தணப் பெருமக்கள் நாட்டின் நன்மை கருதி செய்தனர், செய்தும் வருகின்றனர். இதற்கு ஆலய நிர்வாகிகள், கிராம சைவ மக்கள் பேருதவி புரிகின்றனர்.

**உசன் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நாளை நடைபெறவுள்ள திரவிய அபிஷேக ஸ்கந்தஹோமத்தை (மகாவேள்வி) முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இந்த வகையில் உசன் ஸ்ரீகந்தசுவாமி கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ இரத்தினேஸ்வர கேதீஸ்வர சர்மா அவர்கள்கடந்த பல வருடங்களாக இம் மகா யாகத்தை ஆலய அறங்காவலர், சைவமக்கள் ஆதரவோடு இப்பணியை ஆண்டுதோறும் செய்து வருகின்றார்.

கேதீஸ்வரக் குருக்கள் மாணவராகக் கல்வி கற்கும்போது இவரிடம் சிறந்த நிர்வாகத்திறன் இருப்பதை யான் பார்த்திருக்கின்றேன். இவரது தந்தை இரத்தினசபாபதி ஐயர் போல நடந்ததை, நடக்கவிருப்பதை கூறும் "சித்து" இவரிடமும் இருப்பதை பலர் கூறக்கேட்டிருக்கின்றேன். இதனால் கேதீஸ்வரக் குருக்களை "அருள்வாக்குச் சித்தர்" என மக்கள் அழைக்கத் தொடங்கினர். சுந்தரேஸ்வரக் குருக்களும் கேதீஸ்வரக்குருக்களும் அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பாசறையில் பல ஆண்டுகள் கூட இருந்தபேறு காரணத்தால் தரமேம்பாடடைந்தனர் எனவும் கூறலாம்.

இவர் தொடர்ந்து பல வருடங்களாக இதைப்போல தமது குலதெய்வமாகிய உசன் கஜகேணிப்பிள்ளையார் கோவிலிலும் யாகம் செய்து வருகின்றார்.

சிவஸ்ரீ இரத்தினகேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் மேற்படி யாகம் சிறப்புறவும் தொடரவும் எல்லாம் வல்ல உசன் கந்தப்பெருமானை வேண்டுகின்றேன். மேலாக இந்த நல்ல வேளையில் இவரது தந்தை இரத்தினசபாபதி ஐயர், தாயார் சங்கரி அம்மா, உடன் பிறப்புக்களாகிய அமரர் சோமாஸ்கந்தக் குருக்கள் மற்றும் இரங்கநாதக்குருக்கள், சுந்தரேஸ்வரக்குருக்கள் ஆகியோரையும் நினைவுகூருகின்றேன்.

**க.பேரம்பலம்**
**(ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், உசன், மிருசுவில்)**

## உள்ளும் வெளியும் நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் சு.குணேஸ்வரனின் "உள்ளும் வெளியும்" என்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறீகரன் வாழ்த்துரையையும் கருணாகரன், இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரைகளையும் நிகழ்த்தவுள்ள தோடு, அதிபர் இரா.சிறீநடராசா, தெ.ரவிந்திரன் ஆகியோர் நூலின் பிரதிகளை வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (அ-9-254)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே 63 நாயன்மார் குருபூசை மடத்தில் எதிர்வரும்2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யோகா வகுப்புக்கள் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை தினமும் ஒரு மணிநேரம் நடைபெறும் பயிற்சிக்காலம் 2 மாதங்களைக் கொண்டதாகும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிரணாயாமம், தியானம் மற்றும் தளர்வுப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசிரியர்களால் நுட்பமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடுகளும் வழங்கப்படும்.

யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சர்வதேச யோகா நிறுவனம் ஒன்றிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் அவர்களின் பெயர் விபரங்கள் நிறுவன இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என்று யாழ்.யோக அரங்கத்தினர் கேட்டுள்ளனர். (அ)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதேயிடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்ததாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி நபர் மணல் அகழ்வதற்கு பயன்படுத்திய உழவு இயந்திரம் ஒன்றினையும் பறிமுதல் செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் குறித்த நபரை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த இராணுவத்தினர் அந்த நபரை சோதனையிட்டபோது அவர் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்வது தெரிய வந்ததாகவும் இதனையடுத்து இராணுவத்தினர் தமக்கு தகவல் வழங்கியதையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-6)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை**

நமது உடல்–மன– வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்தும் கிடைக்கும் விடுதலையாகும். இந்த விடுதலை நமது மனதின் நிபந்தனைகளினால் கட்டுப்படாத உலகக் குடி மகனாகி விடுகின்ற ஒரு மாபெரும் எல்லைப் பரம்பைத் தருகிறது. இது நாம் ஒரு குடும்பத்தை மட்டும் சார்ந்துள்ளவர்கள் அல்ல; இந்த மனித குலக் குடும்பத்திற்கே உரியவர்கள் என்று நம்மை எண்ண வைக்கும். இந்த விடுதலை இதயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஆகிறது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பணம் மட்டுமே வாழ்வல்ல



- செல்வம் பெருகியுள்ள காலத்தில் தான் ஒருவனுக்கு பணிவு தேவை. அதே சமயம் வறுமையுற்ற காலத்தில் மனிதனுக்கு துணிவு அவசியம்.
- தன்னந்தனியாக இருப்பவன் பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் பித்துப்பிடித்தவனைப் போல அலைய நேரிடும்.
- துன்பமற்ற இன்பமும், தீமையற்ற நன்மையும் அடைவது என்பது இயலாத ஒன்று. எந்தச் செயலிலும் இன்ப, துன்பம் இரண்டும் கலந்தே இருக்கிறது.
- நன்மை செய்பவன், ஒவ்வொருவருக்கும் கைகொடுத்து மகிழத் தயாராயிருக்கலாம்.
- பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. பணத்தை தவிர, நாம் பிறருக்குச் செய்யும் நன்மையும், தெய்வபக்தியும் நம் மனதில் ஆற்றலை பெருகச் செய்பவை தான்.
- மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது.
- அரிய செயல்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோமாலியாவில மொகடிஹூவின பகுதியில இடமபெறற கார வெடி குணடுத தாககுதலில 11 பேர பலியாகினர. புலனாயவு அதிகாரிகள கூடும குறிதத இடததை குறிவைததே நேறறு இக குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# உக்ரைன் தன்னாட்சி நாடாளுமன்றம் ரஷ்ய ஆதரவாளர்களின் வசமானது

## ரஷ்ய கொடி ஏற்றினர்

(சிம்ஃபெரோபோல்)

**உக்ரைனில் ரஷ்ய ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் சென்று சிம்ஃபெரோபோலில் உள்ள கிரீமியா தன்னாட்சிப் பகுதியின் நாடாளுமன்றம் மற்றும் அரசு அலுவலகங்களை நேற்று முன்தினம் கைப்பற்றினர். பின்னர் அந்த கட்டடங்களில் ரஷ்ய தேசியக் கொடியை ஏற்றினர்.**

அத்துடன்நேற்றைய தினம் அவர்கள் அங்குள்ள விமான நிலையத்தையும் கைப்பற்றினர்.

மேற்கத்தேய நாடுகளின் ஒப்புதலுக்காக, புதிய அமைச்சரவையை உருவாக்கும் முயற்சியில் தலைநகர் கீவில் பாராளுமன்ற உறுப்பினர்கள ஈடுபட்டிருந்தபோது இந்த அதிரடிச் சம்பவம் நிகழ்ந்தது.

ஆயுதங்களுடன் வந்த 50இற்கும் மேற்பட்டோர் அதிரடியாக அரசு அலுவலகங்களை கைப்பற்றினர். அரசு ஊழியர்கள் பணிக்கு வருவதற்கு முன்பே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. பேச்சுவார்த்தைக்கு முயன்றபோது அவர்களில் யாரும் முன்வரவில்லை.

ஐரோப்பிய யூனியனில் உக்ரைனை இணைக்கக் கோரி எதிர்க்கட்சிகள் அளித்த நெருக்கடியால் தலைநகர் கீவை விட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி யானுகோவிச், ரஷயாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தார்.

இதனால் உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் நிலவி வந்தது. இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இராணுவத்துக்கு புதன்கிழமை அளித்த உத்தரவின்படி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீரர்கள் உக்ரைன் எல்லையில் முகாமிட்டனர். அடுத்த நாளில கிரீமியா நகர் கைப்பற்றப்பட்டுள்ளது.

தீவிரவாத அமைப்புகளிடம் இருந்து தனக்கு பாதுகாப்பு அளிக்கும்படி ரஷ்யாவிடம ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் கேட்டுக்கொண்டார். அதையடுத்து ரஷயாவின் நடவடிக்கையில் அவர் திருப்தி அடைந்ததாகவும் அந்நாட்டு அதிகாரிகள் கூறினர்.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி கூறியுள்ளதாவது,

உக்ரையின்ரஷ்ய எல்லை கிரீமியா பகுதியில் தற்போது ரஷ்ய படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இது உக்ரைனில்மேலும் பதற்ற நிலையை அதிகரித்துள்ளது.

எனவே தற்போது வேறு எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டாம் என ரஷ்யாவை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் உக்ரைனன் முன்னாள் ஜனாதிபதி தற்போது ரஷ்யாவின் பாதிகாப்பிலேயே இருப்பதாகவும் கூறப்படுகிறது. (2)




இந் நிலையில், உக்ரைனின் தற்காலிக ஜனாதிபதியான அலெக்ஸாண்டர் துர்ச்சினோவ் கூறுகையில், கிரீமியாவில் அரசு அலுவலகங்கள் கைப்பற்றப்பட்டிருப்பது கண்டனத்துக்குரியது. இது உக்ரைன் அரசுக்கு எதிரான குற்றம். ரஷ்யப் படைகள் தங்கள் நிலையில் இருந்து கிரீமியாவிற்குள் நுழைய முயன்றால்இராணுவ நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

மக்களைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குற்றவாளிகளை தண்டித்து கட்டடங்களை மீட்கவும் இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.

# மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து விபத்து;15 பேர் பலி!



(பாங்கொக்)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து லொறியுடன் மோதியதில் 13 மாணவர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் பள்ளி மாணவர்களை கடற்கரைக்கு ஏற்றி சென்ற பேருந்து லொறியுடன மோதியதில் 13 மாணவர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் உயிரிழந்தனர்.

தாய்லாந்து தலைநகர், பாங்கொக் அருகே பேருந்து ஒன்று பாடசாலை மாணவர்களை கடற்கரை நகரமான பட்டயாவிற்கு ஏற்றி சென்று கொண்டிருந்தது. அப்போது எதிரே வந்த 18 சக்கரங்கள் கொண்ட லொறியுடன் எதிர்பாராத விதமாக பேருந்து மோதியது.

இதில் சம்பவ இடத்திலேயே 11 பேர் மரணமடைந்தனர். படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 30 பேரில் நால்வர் சிகிச்சை பலனின்றி இறந்தனர்.


மேலும் ஐந்து பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பேருந்தில் பயணம் செய்த மாணவர்கள் அனைவரும் 10 முதல் 14 வயதுடையவர்கள் ஆவார்கள். பேருந்தின் பிரேக் செயலிழந்திருக்கலாம் அல்லது சாரதி தூங்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (2)




# மனிதவுரிமைகளுக்கு சீனா மதிப்பளிக்க வேண்டும்

## காய்லோகே தெரிவிப்பு



(பீஜிங்)

சீனா பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வழங்குவது போன்று மனிதவுரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என சீனாவிற்கான அமெரிக்கத் தூதுவர் காய்லோகே தெரிவித்துள்ளார்.

சீனாவில் கடந்த 2 ஆண்டுகளாக அமெரிக்க தூதராக கடமையாற்றிய காய்லோகே விடைபெற்று நாடு திரும்பவுள்ளார்.

இதையொட்டி அவர் பீஜிங்கில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், சீனாவின் செயற்பாடு குறித்து தனது கவலையை வெளிப்படுத்துகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில்,

சீனா தனது நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் அதிக கவனம்செலுத்துகிறது. ஆனால் சுதந்திரம், பேச்சுரிமை, ஆர்ப்பாட்டம் ஆகியவற்றை அனுமதிப்பதில்லை. எனவே பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் தருவது போன்று மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இவரது முயற்சியாலேயே அமெரிக்கா, சீனா இடையே வர்த்தக உறவு மேம்பாடு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# தாய்லாந்து பிரதமர் யிங்லக்கிற்கு ஊழல் ஆணையகம் அழைப்பாணை



(பாங்கொக்)

தாய்லாந்தில் அரிசி மானியத் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் தொடர்பாக, அந்நாட்டின் பிரதமர் யிங்லக் ஷினவத்ராவுக்கு தேசிய ஊழல் எதிர்ப்பு அமைபபு நேற்று முன்தினம் அழைப்பாணை அளித்தது.

இத்திட்டத்தில் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா தனது பணியில் அலட்சியமாக இருந்ததாக அவர் மீது தாய்லாந்து ஊழல் தடுப்பு ஆணையம் அதிகாரப்பூர்வமாக குற்றச்சாட்டு பதிவு செய்து அழைப்பாணை அனுப்பியது.

இந்த திட்டம் ஊழலுக்கு வழிவகுப்பதாகவும், அரசுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் என்றும், நாங்கள் ஏற்கனவே அரசுக்கு தெரிவித்தும் அதை பிரதமர் யிங்லக் ஷினவத்ரா புறக்கணித்து விட்டார் என்றும் ஊழல் தடுப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. இருப்பினும் ஊழல் தடுப்பு ஆணையத்தின் விசாரணைக்காக அவர் ஆஜராகவில்லை.

பிரதமர் இந்த திட்டத்தில் ஊழல் செய்திருப்பது நிரூபிக்கப்பட்டால் அவருக்கு ஐந்து ஆண்டுகள் வரை அரசியலில் ஈடுபட தடை விதிக்கப்படலாம்.

இதற்கிடையே தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பினால் பிரதமருடன் நேருக்கு நேர் விவாதிக்க தயார் என்று அரசு எதிர்ப்புக்குழு தலைவர் சுதீப் சவால் விட்டிருந்தார். இதனை பிரதமர் யிங்லக் நிராகரித்தார்.

அரசியலமைப்பின்படி சுதீப [illegible] (2)

# உணவு விடுதி தீப்பிடித்தது

## 12 பேர் பலி!

(தேகா)

கட்டார் நாட்டில் ஹோட்டல் ஒன்றில் தீப்பிடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

குறித்த ஹோட்டலில் ஏராமானவர்கள் உணவு சாப்பிட்டுக கொண்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென தீப்பிடித்தது.

பின்னர் தீ மளமளவென ஹோட்டல்முழுவதும்பரவியது. இதனால் அங்கு சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள் வெளியே ஓட்டம் பிடித்தனர். அதற்குள் அந்த ஹோட்டலின் ஒரு பகுதி இடிந்தது.

இந்த தீ விபத்தில் 12 பேர் உடல் கருகி பலியாகினர். 30 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் [illegible] வைத்தியசாலை [illegible]கப்பட்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபிதாஸின்...

24ஆம் திகதி மர்மமான முறையில் இறந்துள்ளார்.

இவரது மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரியும், அரசியல் கைதிகள் மீதான சித்திர வதைகள் துன்புறுத்தல்களை தடுத்து நிறுத்தக் கோரியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9முதல் 10 மணிவரை வடமராட்சி புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

எனவே தமிழ் அரசியல் கைதிகள் மீது தொடரும் படுகொலைகள் துன்புறுத்தல்கள், மருத்துவ வசதிகள் மறுக்கப்படல் உள்ளிட்ட அடக்கு முறைகளை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தவும் இவற்றை தடுத்து நிறுத்தவும், கைதிகளது விடுதலையை உறுதிப்படுத்தவும் சர்வதேச சமூகம் உரிய அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென வலியுறுத்தியும் நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் அனைத்து தரப்பினரையும் வேறுபாடுகளை மறந்து கலந்துகொண்டு இப்போராட்டம் வெற்றிபெற உதவுமாறு அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம் என்றுள்ளது. (எ-6,8,24)

## சர்வதேச...

ளார்.

யுத்த நிறைவின் பின்னர் நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச் சாட்டுக்களுக்கு இலங்கை நீதித்துறையினரால் உரிய தீர்வுகளை வழங்க முடியாத அநேக சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்ட முடியும்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்பதே அமைப்பின் நிலைப்பாடு என தெரிவித்துள்ளார்.

நீதித்துறையின்சுயாதீனத்தன்மை, சர்வதேச சுயாதீன யுத்தக் குற்றச் செயல் விசாரணை போன்ற காரணிகளை உள்ளடக்கிய வகையில் இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் அமைய வேண்டுமென சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமைகள் நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.


சிறுபான்மை சமூகத்தவர், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மீதான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட பாரியளவிலான மனித புதைகுழிகள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் கிரமமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ள நிலையில், சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை சில பரிந்துரைகளை செய்துள்ளது. (எ-8)

## சங்கா அதிரடிச் சதம்; இலங்கை போராடி வெற்றி



இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவின் போராட்டகரமான அபார சதத்தின் உதவியினால் இந்திய அணிக்கு எதிரான பரபரப்பான ஆசிய கிண்ண தொடரின் 4-வது லீக் போட்டியில் இலங்கை அணி, 4 பந்துகள் மீதமிருக்கையில் 2 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி வெற்றது.

5 அணிகள் பங்கேற்கும் 12-வது ஆசிய கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் 4-வது லீக் போட்டி இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் நேற்று பதுல்லவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு, ரோகித் சர்மா - ஷிகர் தவான் இணை ஆரம்பத்தை வழங்கியது.

இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 9.2 ஓவர்களில் 33 ஓட்டங்களைப்பகிர்ந்த போது ரோகித் சர்மா 13 ஓட்டங்களுடன் சேனநாயக்கவின் சுழலில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

தொடர்ந்து களமிறங்கிய விராட் ஹேறாலி, களத்தில் நின்ற தவானுடன் ஜோடி சேர்த்தார்.

இவர்கள் இருவரும் இணைந்து இலங்கை பந்துவீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டு 97 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது ஹேறாலி 48 ஓட்டங்களில் மென்டிஸின் பந்தில் போல்டானார்.

எனினும் களத்தில் நின்ற தவான் சிறப்பாக ஓட்டங்களை சேர்த்தார். அவர் அணியின் ஓட்ட எண்ணிக்கை 196 ஐ எட்டியபோது அவர் 94 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை தவறவிட்டார்.

அவரின் ஆட்டமிழப்பின் பின் துடுப்பாட வந்த வீரர்கள் (கார்த்திக் 4, ராயுடு 18, பின்னி 0) விரைவாக வெளியேற இந்திய அணி சற்றுத் தடுமாற்றத்தை சந்தித்தது.

எனினும் அதன் பின் 8-வது விக்கெட்டுக்காக இணைந்த ஜடேஜா - அஷ்வின் இணை ஓட்டங்களை எடுத்து இந்திய அணிக்கு ஆறுதல் அளித்தது.

இந்திய அணி 50 ஓவர்களின் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணியின் பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ் 4, சேனநாயக்க 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

265 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய இலங்கை அணிக்கு குசல் பெரேரா-திரிமன்னே சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இருவரும் இந்திய பந்துவீச்சாளர்களை நேர்த்தியாக எதிர் கொண்டதால்ஓட்டங்கள்விரைவாககுவிந்தது.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 80 ஐ எட்டியபோது நிதானமாக ஓட்டங்களை எடுத்த திரிமன்னே 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் குசல் பெரேரா ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் அவர் அணியின் ஓட்ட எண்ணிக்கை 134 ஐ எட்டியபோது 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவரின் ஆட்டமிழப்பின் பின் இந்திய பந்துவீச்சாளர்களின் கை ஓங்கியது. இதன்காரணமாக இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் ஒருசீரான இடைவெளியில் வீழ்ந்தன.

எனினும் ஆபத்சகாய்ந்தவனாக இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரம் ஓட்டங்களை குவித்து இலங்கை அணிக்கு தெம்பூட்டினார்.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய அவர் ஒருநாள் போட்டிகளில் தனது 19-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இலங்கை அணி வெற்றியிலக்கை நெருங்கிக் கொண்டிருந்தபோது சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த சங்க்கார 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

இறுதியில் இலங்கை அணி 49.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் நாயகனாக சங்கக்கார தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 4 புள்ளிகளைப் பெற்ற இலங்கை அணி, புள்ளிகள் பட்டியலில் 8 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்தது.

5-வது லீக் போட்டியில் பங்களாதேஷ்-ஆப்கானிஸ்தான் அணிகள் இன்று மோதுகின்றது.

## இலங்கையில்...

பெயர் மக்களின் உரிமைகள் முற்று முழுதாக உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் முக்கியமான துறைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் ஜனாதிபதி அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்துள்ளார்.

பொலிஸ், நீதிமன்றம், மனித உரி[illegible]கள் போன்ற முக்கிய துறைகளை கண்காணிக்கும் ஆணைக்[illegible]க்கள் சுயாதீனமாக இயங்கக்கூடிய பின்னணி இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரர்களே முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர்.

ஜனாதிபதியின் குடும்பத்தினரே நாட்டின் பல்வேறு முக்கிய துறைகளில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றனர். இதனால் அதிகாரம ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரை ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

பாதுகாப்புப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக்கருதப்படுவோர் போன்ற தரப்பினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் தரப்பினர் மீது விடுதலைப் புலி ஆதரவு சாயம் பூசப்படுகின்றது.

**கைதிகள் தடுத்துவைப்பு**

தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னதாகவே மிக நீண்ட காலம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

நியாயமான முறையில் வழக்கு விசாரணை நடத்தி சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படாமை மிக முக்கியமான பிரச்சினையாக காணப்படுகின்றது.

வடக்கின் சில பகுதிகளில் தொடர்ந்தும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதிக்கப்படுவதுடன் உயர்பாதுகாப்பு வலயங்களும் அறிக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் சுதந்திரமாக நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் பயணம் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

இடம்பெயர் மக்கள் எங்கு வாழ வேண்டுமென தீர்மானிக்க முடியாத சூழ்நிலை தொடர்கின்றது.

சிறுபான்மை மதச் சமூகத்தினர் மற்றும் அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினரும் அவர்களது ஆதரவாளர்களும் உச்சபட்ச அடிப்படையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத சலுகையை அனுபவித்து வருகின்றனர்.

**சட்டவிரோத கொலைகள**

அரசாங்கப் படையினரும் துணை இராணுவக் குழுக்களும் சட்டவிரோத கொலைகளை மேற்கொள்கின்றனர்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க, வவுனியா சிறைக் கைதி நிமலரூபன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர் குர்ஹாம் சாக்கீ, வெலிவேரிய போராட்டத்தில் மூன்று பேர், சிலாபத்தில் ஒரு மீனவர் உள்ளிட்ட பல்வேறு நபர்கள் சட்ட விரோதமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

வட மாகாணசபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் தேர்தலில் போட்டியிட்ட போது, தேர்தலுக்கு முன்னைய தினம்அவரது வீட்டைத் தாக்கியிருந்தனர்.

சனல் 4 ஊடகத்தில் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்கள் காணொளியாக வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், படையினர் எவ்வித மான குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை எனவும் பூச்சிய சிவிலியன் உயிரிழப்பு என்ற [illegible]பாட்டின் அடிப்படையில் போரை முன்னெடுத்ததாகவும் இராணுவ நீதிமன்றம் அறிவித்துள்ளது.

**கடத்தல்கள்**

பலவந்தமான கடத்தல்கள், காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

காணாமல் போதல்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்கள் எதுவும் கிடையாது.

2012-ம் ஆண்டில் 20க்கும் மேற்பட்ட சட்டவிரோத பலவந்த காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

தமிழ் வர்த்தகரான பிரபாகரன் என்பவர் கொழும்பில் கடத்தப்பட்டிருந்தார். அவர் எங்கு இருக்கின்றார என்பது பற்றிய தகவல்கள் இது வரையில் தெரியவில்லை.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

காணமல் போதல்கள் தொடர்பில் நிறுவப்படும் ஆணைக்குழுக்கள் அதன் பணிகளை உரிய முறையில் ஆற்றுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2010-ம் ஆண்டில் காணாமல் போன லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட தொடர்பில் இதுவரையில் எவ்வித விபரமும் கிடையாது.

**மனித உரிமை மீறல்கள்**

பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடாக சித்திரவதைகள் மற்றும் சட்டவிரோத குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன.

விசாரணை என்ற பெயரில் கைதிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படக் கூடிய அபாயம் நிலவி வருகின்றது.

பொலிஸாருக்கு பயிற்சி வழங்கப்படும் போதே மனித உரிமை விவகாரங்கள் பற்றி கற்றுக் கொடுக்கும் விடயங்கள் பயிற்சியில் உள்ளடக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

சிறைச்சாலை மற்றும் தடுப்பு [illegible]த்து திருப்தி அடைய முடியாது.

சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களின் சூழ்நிலை மிகவும் மோசமாக காணப்படுகின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் அடிப்படை உரிமைகள் உரிய வகையில் பூர்த்தி செய்யப்படுவதில்லை.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டிருக்கின்றனர்.

இவ்வாறான அநேக சந்தர்ப்ப ங்களை உதாரணமாக குறிப்பிட முடியும்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் தங்களது குறைகளை குறிப்பிட வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை.

முறைப்பாடு செய்வதற்கான உரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

இதனால் கைதிகளின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை இதற்கு உதாரணமாக குறிப்பிட முடியும்.

பொலிஸாருக்கு எதிராக அதிகளவில் குற்றச்சாட்டுக்களும் முறைப்பாடுகளும் சுமத்தப்படுகின்றன.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை பாரியளவில் காணப்படுகின்றது.

**ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள்**

தமிழ் ஊடக நிறுவனங்கள் மீது படையினர்தாக்குதல்நடத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்படும்தாக்குதல்களுக்குஎதிராகஉரிய நடவடிக்கைகள்எடுக்கப்படுவதில்லை.

குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்ந்தும் சுதந்திரமாக உலாவி வருகின்றனர்.

ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதுடன் நாட்டை வெளியேறி புகலிடம் கோர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரது உதவியாளர்களும் பல்வேறு நெருக்குதல்களை சந்திக்க நேரிட்டது.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் பல தடவைகள் சிறிதரனிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

குற்ற விசாரணைகள் நியாயமான முறையில் நடைபெறுவதில்லை.

பிரதமர் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சட்ட விரோதமான முறையில் குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இராணுவத்தினர் பாரியளவிலான காணிகளை உயர்பாதுகாப்பு வலயத்திற்காக கைப்பற்றியுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலய அறிமுகமானது பாரியளவிலான இடம் பெயர் மக்கள் காணிகளை இழக்க நேரிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாரியளவில் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் அரசாங்கம் 7 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை சுவீகரித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் முடக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான முறையில் கருத்துக்களை வெளியிடவும், தகவல்களை வழங்கவும் அனுமதி மறுக்கப்படுகின்றது.

அநேகமான ஊடகவியலாளர் சுய தணிக்கை அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

அரச ஊடகங்கள் குரோத உணர்வைத் தூண்டும் வகையில் தகவல்களை வெளியிட்டு வருகின்றது.

வடக்கிற்கு செல்வோர் கடுமையாக கண்கணிக்கப்படுகின்றனர்.

புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை.

மனித உரிமை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு போன்றவற்றிற்கு போதியளவு அதிகாரம் கிடையாது.

இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றன. அவற்றை தடுத்து நிறுத்த அரசாங்கம் இது வரையில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக அமெரிக்காவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயி வெட்டிய...

பேருடைய மனித எச்சங்களை மீட்டு, மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி சின்னையா சிவரூபன், குறித்த விவசாய நிலத்தில் மனித எச்சங்கள் இருப்பதாக எனக்கு நேற்று முன்தினம் மாலை தகவல் கிடைத்ததையடுத்து, நேற்றைய தினம் இந்த மீட்பு பணிகள் இடம்பெற்றன.

மீட்கப்பட்ட 9 பேருடைய மனித எச்சங்களுடன் தேசிய அடையாள அட்டை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. குறித்த தேசிய அடையாள அட்டையினை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம்.

அந்த அடையாள அட்டை மூலம் இறந்தவர் யார் என அடையாளம் காணக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறினார். அத்துடன், இவர்கள் யுத்தத்தில் இறந்திருக்கலாம் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டார். (எ-8)

## டிப்பர் -மோ. சைக்கிள்...

வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிள் டிப்பருக்குள் அகப்பட்டு சிக்குண்டுள்ளதோடு மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் டிப்பர் சில்லுக்குள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உடல்சிதறி பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் அரசடி வீதியைச்சேர்ந்த பொன்னையா தர்மரட்ணம் (வயது-64) என்பவரே சம்பவ இடத்தில் பலியானவராவார். அதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொரு நபரான சுந்தரம் வன்னியசிங்கம் (வயது-54) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிவிபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதோடு டிப்பர் வாகனச்சாரதியை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குறித்த டிப்பர் வாகனச் சாரதி தென்னிலங்கையைச் சேர்ந்தவர் எனவும் வேகக்கட்டுப்பாட்டையிழந்தபோதே மேற்படி விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)


### தவறிவிட்டது

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த கந்தையா சிவராசா என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவை உள்ளடங்கிய பேஸ் புதுக் குடியிருப்பு சந்திக்கும், கோம்பாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5708)

தொடர்புகளுக்கு:-0774188583

### Royally Rest (pvt)LTD

873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அரச அனுமதிப்பத்திரத்துடன் கூடிய தொடர்ந்தும் நடைமுறைப் பாவனையிலுள்ள குளிரூட்டப்பட்ட(2) குளிர்சாதனப் பெட்டிகளுடன் கூடிய கட்டில், மெத்தை, போர்வைகள், உடுப்பு துவைக்கும் இயந்திரம், தற்காலிக மின்னிணைப்பு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரத்துடனான மேலும் பல பொருட்களுடன் சகல வசதிகளுடன் கூடிய Guest House விற்பனைக்கு உண்டு.

(5714) 0774766147, 021 221 9220

| | | | |
|---|---|---|---|
| Madurai மதுரை Rtn 15900/= | Qatar கட்டார் Ow 25300/= | Singapore சிங்கப்பூர் Rtn 30100/= | UK லண்டன் Ow 40000/= |
| Chennai சென்னை Rtn 18300/= | | | France பிரான்ஸ் Rtn 86500/= |
| Malaysia மலேசியா Rtn 33800/= | | | Germany ஜேர்மனி Ow 40100/= |
| Switzerland சுவிஸ் Rtn 119800/= | | | Italy இத்தாலி Rtn 87500/= |
| Bangkok பாங்கொக் Rtn 20600/= | | | Canada கனடா Ow 105000/= |
| | | | NORWAY நோர்வே Rtn 88500/= |




#16 ½ E.S Fernando mawatta Colombo -06 Sri Lanka. #128, Brown Road Jaffna.. இல 128 பிறவுன் வீதி யாழ்ப்பாணம் www.nationtravels.com

### FRENCH LANGUAGE CENTRE

FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

### FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறரர்கள்.......

ஆரம்பம்: 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி)
ஆரம்பம்: 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456 (C-6615)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


## ஆதரவு திரட்...

கடந்த தமிழீழ அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

ஐ.நா மனித உரிமைச்சபையினை மையப்படுத்தி, பன்முகத்தளத்தில் தனது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், மனித உரிமைத் தளத்தில் இந்த ஆதரவு திரட்டலை மேற்கொண்டு வருகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இராஜதந்திரத்தளம், மனித உரிமைத் தளம், அரசியற் தளம், மக்கள்தளம், பரப்புரைத்தளம், ஊடகத்தளம் என பன்முகத்தளத்தில் அனைத்துலக விசாரணையினை நோக்கிய செயல் முனைப்பினை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)


### முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியின் துன்னாலைப் பிரதேச அறநெறிப்பாடசாலை

ஆசிரியர் தெரிவும் நேர்முகத்தேர்வுமுடிவும்

வகை II பண்ணிசை ஆசிரியர்:
பண்ணிசையோடு இறைதுதிப்பாடல்கள் முறைப்படி பயின்ற பட்டம் பெற்ற ஆசிரியர் தேவை.
நேர்முகத்தேர்வு 02.03.2014 மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் நிகழும்
வெள்ளி மட்டும் பணி கவர்ச்சிகரமான வேதனம்.
அறநெறி ஆசிரியர் நேர்முகத்தேர்வு முடிவு:
26.02.2014 எமது நிறுவனத்தில் Dr.T.கலாமணி (தலைவர் சட்டத்துறை யா/ பல்கலை) அவர்கள் தலைமையில் இடம் பெற்ற தேர்வில் பின்வருபவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
Ms.V. ஜெசிக்கா தோட்டக்கடவை,
துன்னாலை வடக்கு, கரவெட்டி

Ms.v. இந்துஜா
பொதுமுகாமையாளர்)
(கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற் 175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 2219016 , 021 5689090 (C-6618)

### திசைகாட்டி கலை இலக்கியமன்ற உறுப்பினர் பெருமக்களுக்கு

* திசைகாட்டி குழுமத்தலைவர்
திரு. S.செல்வராஜா அவர்களின் சிந்தனையில் உதித்த துன்னாலைப் பிரதேச இலவச அறநெறிப்பாடசாலை ஆரம்ப விழா எதிர்வரும் 03.03.2014 பி.ப. 3 மணிக்கு யாழ். துன்னாலை வடக்கு கெ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.
இதில் தாங்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து ஆலோசனைகளை வழங்குமாறு விநயமாக வேண்டி நிற்கின்றோம்.
பயண ஒழுங்குகள் அன்றையதினம் எமது யாழ். அலுவலகத்திலிருந்து பி.ப. 1 மணிக்கு வாகனங்கள் புறப்படும்

Ms.v. இந்துஜா
பொதுமுகாமையாளர் (கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற் 175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 2219016 (C-6618)

### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**EVENING & WEEKEND CLASSES STARTS ON**

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 03.03.2014 | 08.03.2014 | 10.03.2014 | 15.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074 (C-6613)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

### SPOKEN ENGLISH

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கிழமைநாட்களின் மாலை நேர பாடநெறி
05.03.2014 @ 4.00 P.M (3 months)
(திங்கள் - வியாழன் வரை 4.00 - 6.00 P.M வரை)
சனி/ஞாயிறு பாடநெறி (12.00 -3.00 P.M)
15.03.2014 @ 12.00 P.M
நீங்கள் ஆங்கிலம் பேசுவதை உறுதிப்படுத்துங்கள்
A1, B1,B2(Course & Registration)
IELTS Registration Centre
வடமாகாணத்தின் முதன்மை ஆங்கிலக் கல்லூரியில் இன்றே இணைந்திடுங்கள்
E-CITY COLLEGE
372,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
0212217106 / 0774924166/0773400418 (C-6617)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.